# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2194 - 2020 සැප්තැම්බර් මස 18 වැනි සිකුරාදා - 2020.09.18

*2194 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | *1172* | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | *1175* |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலூன பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, ஒற்றோபர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1169-B 82059-5,403 (2020/ 09)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலூவது சேவையாற்றும்படி கேட்கப்படலூம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலூம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனக்ருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
   (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
   (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
   (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
      (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
      (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
   (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
   (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
   (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
   (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
   (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
   (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
   (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
   (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
   (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
   (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பல்கலைக்கழக வைத்தியசாலை

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம்

**பதவி வெற்றிடங்கள்**

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக வைத்தியசாலையில் (UHKDU)நிலவும் பின்வரும் பதவிகளுக்கு பொருத்தமான தராதரமுடைய தொழில் வல்லுநர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:

1. **மருத்துவ வல்லுநர்கள்:**

- மயக்க மருந்துாட்டு நிபுணர்(இருதய சத்திரசிச்சைசார் ஈடுபாடு விரும்பத்தக்கது)
- எலும்புசார் சிகிச்சை நிபுணர்
- தீவிர சிகிச்சை நிபுணர்
- தோல்சார் சிகிச்சை நிபுணர்
- இதய உடற்கூற்றியல் மின் சிகிச்சை நிபுணர்
- பாலியலால் பரவும் நோயியல் நிபுணர்
- அவசர மருத்துவ நிபுணர்
- சிறுநீரக நோயியல் நிபுணர்
- வஸ்கியூலர் மற்றும் மாற்று சத்திர சிகிச்சை நிபுணர்
- காது, தொண்டை, மூக்கு சிகிச்சை நிபுணர்
- விளையாட்டு மருத்துவ நிபுணர்
- இருதய சத்திரசிகிச்சை நிபுணர்
- வாய், மேலண்ணம்சார் சிகிச்சை நிபுணர்
- குழந்தை இருதய நோயியல் நிபுணர்
- பல் சீரமைப்பு சிகிச்சை நிபுணர்
- சட்ட வைத்திய நிபுணர்
- வடிவமைப்பு சத்திர சிகிச்சை நிபுணர்
- கதிரியக்க சிகிச்சை நிபுணர்

**தகைமைகள்:**

i. இலங்கை மருத்துவ சபையின் சட்ட இலக்கம் (திருத்தம்) 2018 ஆம் ஆண்டு 28 இன்படி அச்சபையில் பதிவு செய்திருக்கின்ற அல்லது பதிவு செய்யத்தக்க மருத்துவ உத்தியோகத்தர்களும் பல்வைத்திய நிபுணர்களும்.

அல்லது

ii. இலங்கை மருத்துவ சபையில் (SLMC) இல் செல்லுபடியான முழுமையான பதிவைக் கொண்டிருக்கிற மருத்துவ உத்தியோகத்தர்களும் பல்வைத்திய நிபுணர்களும்.

அத்துடன்

iii. இலங்கை கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பின்படிப்பு நிறுவகத்தின் (PGIM) குறித்த விசேடத்துவத்துடனான மருத்துவ கலாநிதி (MD)/ சத்திர சிகிச்சை முதுமாணி (MS). [இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 11.10.2014 ஆந் திகதியிடப்பட்ட 1883/17 ஆம் இலக்க வர்த்தமானியின் (Extraordinary) பின்னிணைப்பு-I]

அத்துடன்

iv. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) சிறந்த தராதர பத்திரம்

**சம்பள அளவுத் திட்டம்.**- MC 1-2 - ரூபா (91,645.00 - 12 x 2,700.00 - ரூபா 124,045.00)

2. **மருத்துவ அதிகாரிகள் தரம் I**

**தகைமைகள்:**

i. மருத்துவ அதிகாரியாக கடமையாற்றுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழு பதிவினைக் கொண்டிருக்கும் மருத்துவ அதிகாரிகள்.

அத்துடன்

ii. சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் அல்லது இலங்கை சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் இயக்க சபையில் "தனியார் வைத்தியசாலைகள், மருத்துவ மனைகள், மகப்பேற்று மனைகள்" என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் தரம் II மருத்துவ அதிகாரியாக குறைந்தது 06 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்

அத்துடன்

iii. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 11.10.2014 ஆந் திகதியிடப்பட்ட 1883/17 ஆம் இலக்க வர்த்தமானியில் (Extraordinary) பின்னிணைப்பு-II இல்குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட பின்பட்டப்படிப்பு கல்வித்தகைமை

அத்துடன்

iv. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) சிறந்த தராதர பத்திரம்

**சம்பள அளவுத் திட்டம்**.- MO 1-1 ரூபா (58,675.00 - 3 x1,375 - 7 x 1,385 - 2 x 1,910 - 10 x 2,270 - 99,015.00)

* தரம் I மருத்துவ அதிகாரி MO 1-1 Step 14 - ரூபா 78,585 என்பதில் அமர்த்தப்படுவர்.

### 3. பல் வைத்திய நிபுணர் தரம் I

**தகைமைகள்:**

i. பல் வைத்திய நிபுணராக கடமையாற்றுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழு பதிவினைக் கொண்டிருக்கும் மருத்துவ அதிகாரிகள்

அத்துடன்

ii. சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் அல்லது இலங்கை சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் இயக்க சபையில் "தனியார் வைத்தியசாலைகள், மருத்துவ மனைகள், மகப்பேற்று மனைகள்" என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் தரம் II பல் வைத்திய நிபுணராக குறைந்தது 09 வருட அனுப வத்தைக் கொண்டிருத்தல்

அத்துடன்

iii. இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 11.10.2014 ஆந் திகதியிடப்பட்ட 1883/17 ஆம் இலக்க வர்த்தமானியில் (Extraordinary) பின்னிணைப்பு-II இல் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரி க்கப்பட்ட பின்பட்டப்படிப்பு கல்வித்தகைமை

அத்துடன்

iv. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) சிறந்த தராதர பத்திரம்

**சம்பள அளவுத் திட்டம்**: MO 1-1 ரூபா (58,675.00 - 3 x1,375 - 7 x 1,385 - 2 x 1,910 - 10 x 2,270 - ரூபா 99,015.00)

* தரம் I பல் வைத்திய நிபுணர் MO 1-1 Step 14 - ரூபா 78,585.00 என்பதில் அமர்த்தப்படுவர்.

### 4. மருத்துவ அதிகாரி தரம் II

**தகைமைகள்**

i. மருத்துவ அதிகாரியாக கடமையாற்றுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழு பதிவினைக் கொண்டிருக்கும் மருத்துவ அதிகாரிகள்.

அத்துடன்

ii. சுகாதார அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் அல்லது இலங்கை சுகாதார அமைச்சின் தனியார் சுகாதார சேவைகள் இயக்க சபையில் "தனியார் வைத்தியசாலைகள், மருத்துவ மனைகள், மகப்பேற்று மனைகள்" என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் மருத்துவ அதிகாரியாக குறைந்தது 02 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல்

அத்துடன்

iii. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) சிறந்த தராதர பத்திரம்

**சம்பள அளவுத் திட்டம்**: MO 1-1 ரூபா (58,675.00 - 3 x1,375 - 7 x 1,385 - 2 x 1,910 - 10 x 2,270 - ரூபா 99,015)

*தரம் II மருத்துவ அதிகாரி MO 1-1 Step 5 - ரூபா 64,185.00 என்பதில் அமர்த்தப்படுவர்

### 5. பல் வைத்திய நிபுணர் தரம் II

**தகைமைகள்:**

i. பல் வைத்திய நிபுணராக கடமையாற்றுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழு பதிவினைக் கொண்டிருக்கும் மருத்துவ அதிகாரிகள்.

அத்துடன்

ii. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) சிறந்த தராதர பத்திரம்

**சம்பள அளவுத் திட்டம்**.- MO 1-1 ரூபா (58,675.00 - 3 x1,375 - 7 x 1,385 - 2 x 1,910 - 10 x 2,270 - ரூபா 99,015.00)

*தரம் II பல்வைத்திய நிபுணர் MO 1-1 Step 1 - ரூபா 58,675.00 என்பதில் அமர்த்தப்படுவர்.

6. **மருத்துவ அதிகாரி ஆரம்ப நிலை தரம்**.-

**தகைமைகள்**

i. மருத்துவ அதிகாரியாக கடமையாற்றுவதற்காக இலங்கை மருத்துவ சபையின் (SLMC) செல்லுபடியாகும் முழு பதிவினைக் கொண்டிருக்கும் மருத்துவ அதிகாரிகள்.

அத்துடன்

ii. இலங்கை மருத்துவ சபையின் (SLMC) சிறந்த தராதர பத்திரம்

**சம்பள அளவுத் திட்டம்**.- MO 1-1 ரூபா (58,675.00 - 3 x1,375 - 7 x 1,385 - 2 x 1,910 - 10 x 2,270 - ரூபா 99,015.00)

*ஆரம்பநிலை தர வைத்திய அதிகாரி MO 1-1 Step 2 - ரூபா 60,050.00 என்பதில் அமர்த்தப்படுவர்.

**பொது நிபந்தனைகள்**:

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்

ii. வழங்கப்படுகின்ற கடமைகளை ஆற்றுவதற்கான உடல், உள ரீதியான திடம் உள்ளவராகவும் ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தில் அல்லது பல்கலைக்கழக நிர்வாகம் பணிக்கின்ற இடங்களில் கடமையாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

iii. அதிசிறந்த ஒழுக்க நடத்தை உள்ளவராக இருத்தல் வேண்டும்.

iv. விண்ணப்ப முடிவுத் திகதியன்று அனைத்து தகைமைகளையும் உடையவராக இருத்தல் வேண்டும்.

v. மேலுள்ள பதவிகள் நிரந்தரமானது என்பதுடன், பொது சேவையிலுள்ள வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரி தரம்-I, பல்சிகிச்சை நிபுணர் தரம்-I, வைத்திய அதிகாரி தரம்-II, பல்சிகிச்சை நிபுணர் தரம்-II என்பவர்களுக்கு ஒரு (01) வருட தகைமைகாண் காலத்தைக் கொண்டதும் ஏனயவர்களுக்கு மூன்று (03) வருட தகுதிகாண் காலத்தை உடையதுமாகும்.

vi. வைத்திய நிபுணர்கள் மருத்துவ பீடம் மற்றும் இணைந்த சுகாதார பீட துறைத்தலைவர்கள், பீடாதிபதிகளின் வழிகாட்டுதல் மற்றும் மேற்பார்வையின் கீழ் அப்பீடங்களின் புகுமுக மற்றும் பட்டதாரி மாணவர்களுக்கு கற்பிக்கவும் பயிற்சியளிக்கவும் வேண்டப்படுவர்.

vii. தொழிலாளர் சேமலாப நிதியத்திற்கான (EPF) தொழிலாளியின் பங்களிப்பு 10% ஆகவும் இதற்கான பல்கலைக்கழகத்தினது பங்களிப்பு 15% ஆகவும் இருக்கும் என்பதுடன் தொழிலாளர் நம்பிக்கை நிதியத்திற்கான (ETF) பங்களிப்புபு 3% ஆகவும் இருக்கும். (இது பாராளுமன்றத்தால் கொண்டுவரப்படுகிற சட்டங்களுக்கேற்ப மாற்றத்திற்குட்படக் கூடியது).

viii. ஏற்கனவே அரசாங்க சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை தமது நிறுவன தலைவரினூடாக சமர்ப்பிக்கும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ix. ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் பொருத்தமான பரீட்சார்த்திகளை பட்டியலிட்டு தெரிவு செய்ய அதிகாரமுடையது.

x. பொருத்தமாக நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பொருத்தமான சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து பதிவுத் தபாலில் 'நிர்வாகப் பணிப்பாளர், ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம், பல்கலைக்கழக வைத்தியசாலை, வேரஹெர' எனும் முகவரிக்கு 30.09.2020 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடிய வகையில் அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிடவும்.

xi. பூரணப்படுத்தப்படாத அல்லது பிந்திய விண்ணப்பங்கள் மற்றும் கூறப்பட்ட வடிவத்திற்குட்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

xii. விண்ணப்பப்படிவம் மற்றும் ஏனைய தகவல்களை பல்கலைக்கழக இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். www.kdu.ac.lk

மேஜர் ஜெனரல் (ஓய்வு) கமல் குணரத்ன,
டப்டப்வீ ஆர்டப்பீ ஆர்எஸ்பீ யூஎஸ்பீ
என்டீசீ பீஎஸ்சீ எம்பில்
செயலாளர்,
பாதுகாப்பு அமைச்சு.

ஜெனரல் சேர் ஜோன் கொத்தலாவல
பாதுகாப்புப் பல்கலைக்கழகம்,
பாதுகாப்பு அமைச்சு,
இல. 15/5, பாலதக்ஸ மாவத்தை,
கொழும்பு 03.

9-639

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் III ஆம் தரத்திற்குச் ஆட்சேர்ப்பு செய்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2020

இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் III ஆம் தரத்திற்கான பதவிகளில் காணப்படும் 10 வெற்றிடங்களை நிரப்புவதற்காக பின்வரும் தகைமையுடைய அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில், சேவையிலுள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினைக் கீழ்க் குறிப்பிடப்படும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "பரீட்சை ஆணையாளர் நாயகம், நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி- இல. 1503, கொழும்பு" என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை கட்டடக் கலைஞர் சேவை III ஆம் தரத்திற்காக இணைத்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். மேலும், பரீட்சையின் பெயரினை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்ப முடிவுத் திகதி 2020.10.19 ஆந் திகதியாகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பிலான ஆவணம் போன்றன தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் பற்றிய முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்ப முடிவுத் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்புக்கு விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

01. **ஆட்சேர்ப்பு முறை**.- எழுத்துப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் பெறுபேற்றின் அடிப்படையில் இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் III ஆந் தரத்துக்கு மட்டுப்படுத்தப்பட்ட அடிப்படையில் உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளல் இடம்பெறும்.

இப் பரீட்சையின் ஒவ்வொரு பாடத்திலும் 40% அல்லது அதனைவிட அதிகமாகப் புள்ளிகளைப் பெற்று சித்தியெய்திய பரீட்சார்த்திகள் பெற்றுக்கொண்ட புள்ளிகளின் திறமை ஒழுங்கிற்கு ஏற்ப ஆட்சேர்ப்பு செய்வதற்குக் கருதுகின்ற எண்ணிக்கையின் இரு மடங்கினர் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை பரீட்சார்த்திகளுக்கு வழங்கப்படும் புள்ளிகளுடன், எழுத்துப் பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகளையும் சேர்த்து மொத்தப் புள்ளிகளின் திறமை முன்னுரிமை அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்படும்.

நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுல்படுத்தப்படும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய தீர்மானிக்கப்படும்.

மட்டுப்படுத்தப்பட்ட வரையறையின்கீழ் தகைமை பெறும் விண்ணப்பதாரிகள் போதுமான எண்ணிக்கையில் காணப்படாதவிடத்து அவ்வெண்ணிக்கையினர் திறந்த வரையறையின் மூலம் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

02. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்** :

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/ தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றுக்கும் பங்களிப்புச் செய்தல் வேண்டும் ;

(ii) இப்பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகத்தர்கள் ஒரு வருட தகுதிகாண் காலப்பகுதிக்கு உட்படுத்தப்படுவர் ;

(iii) அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 01/2014 இற்கு இணங்க மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சி மட்டத்தை ஐந்து (05) வருடங்களினுள் பெற்றுக்கொள்ள வேண்டும் ;

(iv) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிமுறைகளுக்கும், இலங்கை கட்டடக் கலைஞர் சேவை தொடர்பான சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகளும் இப்பதவிக்காக உரியதாகும்.

03. **சம்பள அளவுத்திட்டம்.**- இப்பதவிக்குரிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இற்கமைய SL-1-2016 ரூபா 47,615.00 - 10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 110,895.00 மாதாந்த சம்பள அளவுத்திட்டத்திற்கு உரித்தாகும்.

04. **கல்வித் தகைமைகள்.**-

I.

(i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து ஐந்து (05) வருட கட்டடக் கலைஞர் விஞ்ஞானமானி பட்டத்தைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து மூன்று வருட விஞ்ஞானமானி கட்டமைப்புச் சுற்றுச்சூழல் தொடர்பான பட்டத்துடன் குறித்த துறையில் பட்டப்பின் பட்ட டிப்ளோமாவைப் பெற்றிருத்தல் ;

அல்லது

(iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து மூன்று வருட விஞ்ஞானமானி கட்டமைப்புச் சுற்றுச்சூழல் தொடர்பான பட்டத்துடன் குறித்த துறையில் ஐந்து (05) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

மற்றும்

மேற்கூறப்பட்ட தகைமையைப் பூர்த்தி செய்துள்ள அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையிலும் ஐந்து (05) வருட முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்தை நிறைவு செய்துள்ள அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 06/2006 இன் MN 2 அல்லது அதற்கு மேற்பட்ட சம்பளக் குறியீட்டின் கீழ் சம்பளம் பெறும் உத்தியோகத்தர்கள்.

II. இலங்கையின் கட்டடக்கலைஞர்கள் நிறுவனத்தில் அங்கீகாரம் பெற்ற பாடநெறி I ஆம் பகுதியில் சித்தியெய்திய அரசாங்க/ மாகாண சேவையில் 10 வருடங்கள் முனைப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தையுடைய உத்தியோகத்தர்கள் ;

III. கிட்டிய ஐந்து (05) வருடங்களில் திருப்திகரமான சேவைக் காலத்தையுடைய இலங்கை தொழில்நுட்ப சேவையின் விசேட வகுப்பில் உள்ள வரைபடக் கலைஞர்கள்.

05. **உடற் தகைமைகள் :**

(i) சகல பரீட்சார்த்திகளும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றக் கூடியவராகவும்,

(ii) பதவியின் கடமையை நிறைவேற்றுவதற்குப் போதியளவு உடல் உளத் தகைமை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

06. **வயதெல்லை :** ஏற்புடையதன்று.

07. **ஏனைய தகைமைகள் :**

(i) விண்ணப்பதாரிகள் சிறந்த நன்னடத்தை கொண்டவர்களாக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு அதாவது, 2020.10.19 ஆந் திகதிக்கு உடன் முன்னரான ஐந்து (05) வருடங்களினுள் திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(iii) சேவையில் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

(iv) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு அதாவது, 2020.10.19 ஆந் திகதிக்கு பதவியில் இணைத்துக் கொள்வதற்காக அவசியப்படும் சகல தகைமைகள் மற்றும் நிபந்தனைகளை சகல வழிகளிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

*08. 8.1* ***எழுத்துப் பரீட்சை*** :

*8.1.1* இப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

*8.1.2 பாடத்திட்டம்* :

| *இலக்கம்* | *பாடங்கள்* | *அதிகபட்ச புள்ளியின் அளவு* | *சித்திக்குரிய புள்ளி அளவு* | *காலம் மணித்தியாலம்* |
|---|---|---|---|---|
| *01* | கட்டடக் கலையியல் படம் சார் அறிவு | *100* | *40* | *03* |
| *02* | பொது வினாப்பத்திரம் | *100* | *40* | *02* |

*பாட இலக்கம் 01* - கட்டடக் கலையியல் பாடம்சார் அறிவு.- இவ்வினாப்பத்திரம் கீழ்வரும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்கும். காலம் மூன்று (03) மணித்தியாலங்களாகும்.
I ஆவது மற்றும் II ஆம் பகுதிகளில் கட்டாய வினாக்கள் இரண்டிற்கும் (20 புள்ளிகள் வீதம்) மற்றைய பகுதிகள் மூன்றிலும் 6 வினாக்களில் நான்கிற்கு விடையளித்தல் வேண்டும் (15 புள்ளிகள் வீதம்).

*சித்தியெய்துவதற்கான புள்ளியின் அளவு 40%*

I ஆம் பகுதி - அரசாங்க சேவையில் கட்டடக் கலைஞரின் பிரயோக வகிபாகம் :

(1) அரசாங்க மற்றும் தனியார் துறைகளுக்கிடையில் கட்டடக் கலையியலின் பிரயோக வித்தியாசம்
(2) கட்டடக் கலைஞர் வகிபாக பரப்பின் அனுகூலம் மற்றும் பிரதிகூலங்கள்
(3) பொது மக்கள் மீதான பொறுப்புக்கள்
(4) அமைப்பின் மீதான பொறுப்புக்கள்

II ஆம் பகுதி

(1) அடிப்படை ஆய்வு மற்றும் விமர்சனம்
(2) கருதுகோள் அடிப்படையான வடிவமைப்பு மற்றும் அடிப்படை மதிப்பீட்டிற்கான அணுகுமுறை
(3) விதிகளைத் திட்டமிடல் மற்றும் கட்டமைத்தலுடன் அவசியப்படும் அங்கீகாரங்கள் மற்றும் விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளல்
(4) குறித்துரைக்கப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களின் அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காகத் தயாரிக்கப்பட வேண்டிய திட்டமிடல் சாதனங்கள்
(5) கட்டடக் கலையியலின் விவரமான கள திட்டமிடல் மற்றும் விவரணம்
(6) ஏனைய ஆலோசகர்களுடன் (கட்டமைப்பு திட்டமிடல் மற்றும் சேவைத் திட்டமிடல்) ஒன்றிணைந்து விவரமாகத் தகவல்களைத் தயாரித்தல்

III ஆம் பகுதி -அமைப்பின் பணிகள் மற்றும் செயற்பாட்டு ஊடகம்

(1) அமைப்பின் தொலைநோக்கு மற்றும் பணிநோக்கு
(2) அமைப்பின் வகிபாகம் மற்றும் பணிகள்
(3) அமைப்பின் கட்டமைப்பு
(4) அமைப்பின் நடவடிக்கைகளை நிறைவேற்றும்போது அதன் ஒவ்வோர் துறையின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் மற்றும் உள்ளக தொடர்புகள்
(5) ஏனைய அரசாங்க நிறுவனங்களுடன் காணப்படும் தொடர்புகள்

IV ஆம் பகுதி - கருத்திட்டத்தின் முன் கட்டுமான காலத்தினுள் கருத்திட்டத்திற்கு கட்டடக் கலைஞரின் பங்களிப்பு

(1) கேள்விமனு ஆவணங்கள் மற்றும் நிறுவன மதிப்பீடு
(2) பெறுகை நடவடிக்கை வழிகாட்டுதல்கள்
(3) முன் கேள்வி (டென்டர்) கூட்டங்கள் மற்றும் கேள்வி நடவடிக்கைகள்
(4) தொழில்நுட்ப மதிப்பீடுகள் மற்றும் கேள்விச் (டென்டர்) சபையின் வகைகள்
(5) உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்களைக் கையளித்தல்

V ஆம் பகுதி - கருத்திட்டம் இயங்கும் செயல்முறையினுள் மற்றும் ஒப்பந்தக் காலத்தின் பின்னர் கட்டடக் கலைஞர்களின் பங்களிப்பு

(1) வேலைத்தளத்தில் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்
(2) தரக்கட்டுப்பாட்டு நடைமுறைகள்
(3) நிர்மாணப் பணிக் குழுவுடன் ஒருங்கிணைப்பினை ஏற்படுத்திக்கொள்ளல்
(4) கட்டமைப்புச் சுற்றுச்சூழலை மதிப்பீடு செய்தல் மற்றும் பின் பகுப்பாய்வு நடவடிக்கைகள்
(5) பராமரிப்புக் கையேடு

*பாட இலக்கம் 02* - பொது வினாப்பத்திரம் :

இவ்வினாப்பத்திரம் 2 மணித்தியாலங்களுக்கு வரையறுக்கப்பட்டுள்ளது. வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது :

I ஆம் பகுதி.- அனைத்துப் படங்களும்/ விடயங்களும் உள்ளடங்கும் வகையில் பரந்த விஞ்ஞான விடயங்கள் தொடர்பான வினாக்களைக் கொண்டுள்ளது.

II ஆம் பகுதி.- பொருளாதார, அரசியல், கலாசார மற்றும் கலை போன்ற ஏனைய சாதாரண விடயங்களுடன் தொடர்பான வினாக்களினையும் உள்ளடக்கியுள்ளது.

வினாப்பத்திரத்தின் கட்டமைப்பு :

* மேற்குறித்துரைக்கப்பட்டுள்ள வினாப்பத்திரத்திலுள்ள வினாக்கள் பல்தேர்வு வினாக்களாகவோ அரை கட்டமைக்கப்பட்ட வினாக்களாகவோ அல்லது அவற்றின் சேர்மானங்களாகவோ இருக்க முடியும்.
* சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

8.1.3 *பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடல்.-* எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றி தகைமையடைந்த பரீட்சார்த்திகளின் திறமையின் ஒழுங்கில் தயாரிக்கப்பட்ட, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அறிவித்தலுக்கிணங்க குறித்துரைக்கப்பட்ட எல்லைக்கு அதிகமாக புள்ளிகளைப் பெற்ற பரீட்சார்த்திகளின் பெயர்களை உள்ளடக்கிய பெறுபேற்று அட்டவணை செயலாளர், அரசாங்க சேவை ஆணைக்குழுவினருக்கு வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளினதும் பெறுபேறுகள் தனிப்பட்ட வகையில் அனுப்புவதற்கு அல்லது இலங்கைப் பரீட்சை திணைக்களத்தின் www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

8.2 ***நேர்முகப் பரீட்சை*** :

8.2.1 *கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை* :

| *பரீட்சித்துப் புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள்* | *உச்ச புள்ளிகளின் அளவு* | *மொத்தப் புள்ளிகளின் அளவு* |
|---|---|---|
| 1. மேலதிக கல்வித் தகைமைகள் | | 20 |
| (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து பெற்றுக்கொண்ட முதுநிலை மாணிப் பட்டம் | 10 | |
| (ii) முழுமையான தொழிற் தகைமை | 10 | |
| 2. மேலதிக தொழிற் தகைமை | | 20 |
| (i) தற்கால சேவைத்துறைக்கு உரித்துடையதாக முன்வைக்கப்பட்டுள்ள வெளியீடுகள் (அவை வெளியிடப்பட்ட ஊடகங்கள் மற்றும் ISBN இலக்கம் பெறப்பட்டுள்ளதா என உறுதிப்படுத்தல் வேண்டும் - ஒன்றிற்கு 01 புள்ளி வீதம்) | 05 | |
| (ii) தற்கால சேவைத் துறைக்கு உரித்துடையதாக உள்நாட்டு/ வெளிநாட்டு நிறுவனத்தில் வகித்த பதவி (குறித்துரைக்கப்பட்ட சேவைச் சான்றிதழினை முன்வைத்தல் வேண்டும் - ஒன்றிற்கு 1 புள்ளி வீதம்) | 05 | |

| பரீட்சித்துப் புள்ளிகள் வழங்கப்படும் தலைப்புக்கள் | உச்ச புள்ளிகளின் அளவு | மொத்தப் புள்ளிகளின் அளவு |
|---|---|---|
| (iii) தற்கால சேவைத் துறையினுள் பெற்ற விருதுகள்/ பாராட்டுக்கள் (பொது 230 மாதிரிப்படிவம் மூலம் அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்த முடியும் (ஒன்றுக்கு 1 புள்ளி வீதம்)<br>(iv) சேவைத் துறைக்கு உரித்துடையதாக செய்யப்பட்ட புதிய தயாரிப்பு (புதிய தயாரிப்பாக அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தின் மூலம் வெளியிடப்பட்ட சான்றிதழ் முன்வைக்கப்படல் வேண்டும்) - (ஒன்றுக்கு 1 புள்ளி வீதம்) | 05<br>05 | |
| 3. **தொழிற்துறை அனுபவம்**<br>(i) தனியான கட்டிடங்கள் தொடர்பான கட்டடக் கலைஞனின் செயற்பாடுகள்<br>- வீடு<br>- பொது அலுவலகம்<br>(சதுர அடி 300 இலிருந்து 500 வரையான வீடுகள் மற்றும் அரசின் பொது அலுவலகக் கட்டிடங்கள்)<br>(ii) அரை அடுக்கு மாடிக் கட்டிடம் தொடர்பான கட்டடக் கலைஞனின் செயற்பாடுகள்<br>- வீடமைப்புத் திட்டங்கள்<br>- கலப்பு அபிவிருத்திக் கட்டிடங்கள் (2 மாடியில் இருந்து 5 வரை)<br>(iii) உயரமான கட்டிடங்கள் தொடர்பான கட்டிடக் கலைஞனின் செயற்பாடுகள்<br>- வீடமைப்புத் திட்டங்கள்<br>- கலப்பு அபிவிருத்திக் கட்டிடங்கள்<br>(6 மாடியினைவிட அதிகமான அடுக்கு மாடிச் செயற்திட்டங்கள்)<br>(iv) வாழ்விடம் மற்றும் பிரதான திட்டப்பணிகள்<br>- வீடமைப்புத் திட்டங்கள்<br>- Master Plan (பிரதான திட்டம்)<br>- கலப்பு அபிவிருத்தி செயற்திட்டங்கள்<br>(v) ஏனையவை<br>- மேலதிக நிர்மாணிப்புக்கள் (உதா : கண்காட்சித் தளம்)<br>- சமூக சேவைப் பங்களிப்பு<br>- (Housing Clinic)<br>- தொழில்சார் தொழிற்றுறைக்கு உரிய வேற்று பாடநெறிகள் பயின்றிருத்தல் (உதா : பசுமைக் கட்டிடம்)<br>(குறித்துரைக்கப்பட்ட விடயங்களை உறுதிப்படுத்துவதற்காக ஏற்றுக்கொள்ளத்தக்க சான்றிதழ்களை முன்வைத்தல் வேண்டும்.) | 15<br>10<br>10<br>10<br>10 | 55 |
| 4. **நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமைகள்** | | 05 |
| மொத்தப் புள்ளிகள் | | 100 |

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சை சபையின் மூலம் புள்ளிகள் வழங்கப்படுவதோடு தகைமைகள் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

09. **பரீட்சை நிபந்தனைகள் :**

(i) இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பதாரிகள் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியிலேயே விடையளிக்க வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு தனது விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பிடுகின்ற பரீட்சை மொழி மூலத்தினை மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது. சகல பரீட்சார்த்திகளும் வினாப்பத்திரங்கள் இரண்டிற்கும் (2) தோற்ற வேண்டும்.

(ii) பரீட்சைக் கட்டணம்.- பரீட்சைக் கட்டணம் 1,000.00 ரூபா ஆகும். பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்தவொரு தபாலகம்/உப தபாலகங்களில் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரிலேயே பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழராது ஒட்டிவிடவும். அப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக் கொள்வது பிரயோசனப்படும். பரீட்சைக் கட்டணமாக காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(iii) பரீட்சைக்காகச் செலுத்திய பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது.

(iv) பரீட்சை நடாத்தப்படும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(v) பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரிகள் அனுமதிப்பத்திரமின்றி பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க அனுமதி யளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தனது கையொப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதிப்பத்திரத்தை மாத்திரம் ஒப்படைத்தல் வேண்டும்.

அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு அல்லது அத்தினத்திற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாகப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை கொண்டவர் எனக் கருதப்பட மாட்டார்.

(vi) விண்ணப்பப்படிவம் 22 × 29 cm அளவில் ஏ4 கடதாசிகளில் தயாரிக்கப்பட வேண்டியதுடன், 1.0 இலிருந்து 3.2 வரையான தலைப்புக்கள் முதற்பக்கத்திலும், 3.3 இலிருந்து 6.0 வரையான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் எஞ்சியவை மூன்றாவது பக்கத்திற்கும் வருமாறு தயாரிக்கப்பட வேண்டியதோடு அதற்குரிய தகவல்கள் தமது கையெழுத்தினால் தெளிவாக எழுதப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்திராத விண்ணப்பப்படிவங்கள், முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றினை வைத்திருத்தல் பிரயோசனமிக்கதாகும்.

(vii) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றது என அறியப்படுத்தப்பட மாட்டாது என்பதுடன், பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது பற்றி உடனடியாக பத்திரிகைகள் மற்றும் திணைக்களத்தின் இணையத் தளத்தில் அறிவித்தலொன்று வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கடந்ததன் பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாது விடின் அறிவித்தலில் குறிப்பிட்டவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியப்படுத்துதல் வேண்டும். நீர் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியையும், விண்ணப்பப்படிவம் பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டினையும், விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளியில் உள்ளவராயின் மேற்படி தகவல்களுடன் தொலைநகல் மூலம் பரீட்சை அனுமதிப்பத்திரப் பிரதியொன்றைத் துரிதமாகப் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பதாரியின் தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு வேண்டுதல் கடிதமொன்றை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தொலைநகல் இலக்கத்திற்கு அனுப்பி வைத்து விசாரிப்பது மிகவும் பயனுள்ளதாகும்.

(viii) இப்பரீட்சையானது 2020 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் கொழும்பு நகரில் மட்டும் நடாத்தப்படுவதோடு, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்குட்பட்டு இப்பரீட்சையினைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச்செய்வதற்குரிய அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு உரிமையுண்டு.

(ix) பரீட்சையினை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படும் சட்டதிட்டங் களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவார்கள். அச்சட்ட திட்டங்களை மீறும் சந்தர்ப்பங்களில் பரீட்சை ஆணையாளரினால் விடுக்கப்படும் தண்டனைக்கு உட்படுவார்கள். அச்சட்ட விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(x) பரீட்சார்த்தியின் ஆள் அடையாளம்.- பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியுறுகின்ற விதத்தில் சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்தல் வேண்டும். பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

**கவனத்தில் கொள்ள வேண்டியவை :**

(அ) விண்ணபத்துடன் ஏதேனும் ஆவணங்களோ அல்லது அவற்றின் பிரதிகளையோ இணைத்தல் கூடாது.
(ஆ) நேர்முகப் பரீட்சையின்போது கேட்கப்படும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பப்படிவங்கள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

அரசாங்க சேவையில்/மாகாண சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களினால் தமது திணைக்களம்/நிறுவனப் பொறுப்பாளர் ஊடாக விண்ணப்பப்படிவங்களை அனுப்புதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்ற முன்னர் சகல விண்ணப்பதாரிகளும் அவர்களது கையொப்பத்தை தாம் சேவையாற்றும் நிறுவனத்தின் தலைவர் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

10. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
அரசாங்க சேவைகள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2020, செத்தெம்பர் 03.

(அலுவலக உபயோகத்திற்காக)

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் III ஆம் தரத்திற்கு சேர்த்துக்கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை (2020)**

Limited Competitive Examination for Recruitment to Grade III of Sri Lanka Architectural Service - (2020)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4 ☐ (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

* விண்ணப்பப்படிவத்தினை நிரப்ப வேண்டியது பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலாகும்.

1. தனிப்பட்ட தகவல்கள்:

1.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
.....................................................................................................................
.....................................................................................................................

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர், முதலெழுத்துக்களை இறுதியில் எழுதுக (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :-
(உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.)
.....................................................................................................................

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-
.....................................................................................................................
.....................................................................................................................

1.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

2. 2.1 நிரந்தர முகவரி கெப்பிட்டல் (ஆங்கில பெரிய எழுத்துக்களில்) :-
(இம்முகவரிக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும்.)
..........................................................................................................................................
..........................................................................................................................................

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-
..........................................................................................................................................
..........................................................................................................................................

2.3 தொலைபேசி இலக்கம் : கைடக்கம்: | | | | | | | | | | | வதிவிட: | | | | | | | | | | |

3. 3.1 பால் (ஆண்/பெண்) :- ☐
ஆண் - 0 பெண் - 1
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

3.2 இனம் : ☐
சிங்களவர்-1, தமிழர்-2, இந்தியத் தமிழர்-3, முஸ்லிம்-4, ஏனைய-5
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுவும்.)

3.3 பிறந்த திகதி :

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

3.4 விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :
வருடங்கள் : | | | மாதங்கள் : | | | நாட்கள்: | | |

3.5 விவாகமானவர்/விவாகமாகாதவர் பற்றி : ☐
(விவாகமானவர்-1, விவாகமாகாதவர்-2) (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுவும்.)

3.6 மின்-அஞ்சல் முகவரி :----.

4. வர்த்தமானி அறிவித்தலில் 7 ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட திணைக்கள தரத்தில் உமது சேவை மற்றும் தரம் (வகுப்பு, தரம் அல்லது வகுதி (இருப்பின்) அதனைக் குறிப்பிடல் வேண்டும். தகைமைகளைப் பெற்றுத்தரும் சேவை / தரம் ஒன்றிற்கு அதிகமான எண்ணிக்கையில் நீர் சேவையாற்றியிருப்பின் அச்சேவை மற்றும் தரத்தினை திகதிகளுடன் குறிப்பிடல் வேண்டும்.

4.1 தற்போது வகிக்கும் பதவி : ..........................................................................................
4.2 பதவிக்குரியதான சேவை (அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவை) : ..........................................
4.3 தரம் : ..........................................................................................................
4.4 வகுப்பு/வகுதி : ..................................................................................................
4.5 பதவியை ஏற்ற திகதி : ..........................................................................................
4.6 அப்பதவியில் நிரந்தரம் செய்யப்பட்ட திகதி : ..........................................................
4.7 பட்டம் செல்லுபடியாகும் திகதி : ...............................................................................

5. வர்த்தமானி அறிவித்தலின் 7 ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட சேவைகள்/ தரங்களில் விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு நிரந்தர மற்றும் தொடர்ச்சியான முழுதான சேவைக் காலம் : ........................................

6. பற்றுச்சீட்டினை சரியாக இங்கு ஒட்டவும் :-

☐

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
செலுத்திய அலுவலகம் :----.
திகதி :----.

7. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இவ் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு (அதாவது 2020.10.19 ஆந் திகதிக்கு) முன்னைய ஐந்து வருடங்களினுள் (சேவை அல்லது திணைக்கள பரீட்சையினை சித்தியெய்துவது நிபந்தனையாகக் காணப்படும் வேதனாதிகள் தவிர) உத்தியோகத்தரின் வேதனாதிகள் அனைத்தினையும் சம்பாதித்துள்ளார் என்றும், அக்காலத்தினுள் செய்த குற்றத்திற்கு (கண்டிப்பினைத் தவிர) எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கும் அவ்வுத்தியோகத்தர் உட்படவில்லை எனவும் குறிப்பிடுகின்றேன். மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையில் தோற்றுவதற்கு தாம் தகைமையுடையவர் எனவும், பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இலக்கம் .................... மற்றும் .................... ஆந் திகதியுடைய பற்றுச்சீட்டினை இதனுடன் ஒட்டியதாகவும் பிரகடனம் செய்கின்றேன். மேலும், பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப செயற்படுவதற்கும், இப்பரீட்சையின் நிபந்தனைகளுக்கு இணங்க நான் தகைமையற்றவர் எனத் தெரிந்தால், பரீட்சைக்கு முன் அல்லது தோற்றும்போது அல்லது அதன் பின்னர் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டேன் என்ற தீர்மானத்திற்கு உடன்படுகிறேன். மேலும் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பிழை அல்லது உண்மைக்குப் புறம்பானதாக இருப்பின் இழப்பீட்டுத் தொகையினைச் செலுத்தாமல் தன்னை சேவையிலிருந்து பதவியிறக்கம் செய்வதற்கும், அவ்வாறே பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படுகின்ற சட்டதிட்டங்கள் மற்றும் பெறுபேற்றினை வெளியிடுதல் தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களிற்கு கட்டுப்படுவதாகவும் உறுதியளிக்கின்றேன்.

----
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

8. திணைக்களத் தலைவரின் சான்றுரை (பிரத்தியேகக் கோவைக்கு ஏற்ப):

இவ்விண்ணப்பப்படிவத்தினை முன்வைக்கும் .................................................. திரு./ திருமதி/ செல்வி ..................... ஆந் திகதிக்கு முன்னைய ஐந்து வருடங்களினுள் (சேவை அல்லது திணைக்கள பரீட்சையினை சித்தியெய்துவது நிபந்தனையாகக் காணப்படும் வேதனாதிகள் தவிர) அவரின் வேதனாதிகள் அனைத்தினையும் சம்பாதித்துள்ளார் என்றும், அக்காலத்தினுள் செய்த குற்றத்திற்கு (கண்டிப்பினைத் தவிர) எவ்வித ஒழுக்காற்றுத் தண்டனைகளுக்கும் அவ்வுத்தியோகத்தர் உட்படவில்லை எனவும் இவ்விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் அறிக்கையிலிருந்து எடுக்கப்பட்டதாகவும், குறித்த வர்த்தமானிப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமையுள்ளது எனவும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும் இப்பதவிக்காகத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில் இந்நிறுவன சேவையிலிருந்து விடுவிக்கத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ள முடியும் எனவும் சான்றுப்படுத்துகின்றேன்.

----
திணைக்களத் தலைவர்/அதிகாரமளிக்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்.

திகதி :----.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
(பதவி முத்திரையிட்டு அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.)

9-454

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவையின் III ஆம் தரத்திற்குச் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2019 (2020)

இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவை III ஆம் தரத்திற்கான பதவிகளில் காணப்படும் 16 வெற்றிடங்களை நிரப்பும் வகையில் தகைமையுடையவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சையை நடாத்துவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தினைக் கீழ்க்குறிப்பிடப்படும் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக்) கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், தபால் பெட்டி இல. 1503, கொழும்பு என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும். விண்ணப்பங்களை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவையின் III ஆம் தரத்திற்காக இணைத்து கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை" என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். மேலும், பரீட்சையின் பெயரினை சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்குப் மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்ப முடிவுத் திகதி 2020.10.19 ஆந் திகதியாகும்.

**குறிப்பு**.- விண்ணப்பப்படிவம் அல்லது அது தொடர்பிலான ஆவணம் போன்றன தபாலில் காணாமல் போதல் அல்லது தாமதமடைதல் பற்றிய முறைப்பாடுகள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்ப முடிவுத் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்புக்கு விண்ணப்பதாரிகளே பொறுப்பேற்க வேண்டும்.

1. **சேவையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும் முறை**.- எழுத்துப் பரீட்சையில் சகல பாடங்களிலும் சித்தியெய்திய விண்ணப்பதாரிகளில் பரீட்சையில் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளின் திறமைகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நாடப்படும் எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு தகைமையுள்ள விண்ணப்பதாரிகள் இணைத்துக்கொள்ளப்படுவார்கள்.

நியமிக்கப்படும் எண்ணிக்கை மற்றும் நியமனம் அமுல்ப்படுத்தப்படும் திகதி அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைக்கமைய தீர்மானிக்கப்படும்.

2. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்** :

(i) இந்நியமனம் நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். உமக்குரித்தான ஓய்வூதியத் திட்டமானது அரசாங்கத்தினால் தொடர்ந்தேர்ச்சையாக எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு உட்பட்டதாகும். தாங்கள் விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம்/தபுதாரர், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ஆகியவற்றுக்கும் பங்களிப்புச் செய்தல் வேண்டும். அத்துடன் அரசினால் காலத்துக்குக் காலம் விதிக்கப்படும் வகையில் தாங்கள் அதற்கான பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும் ;

(ii) இப்பதவிக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் மூன்றாண்டு (03) தகுதிகாண் காலத்திற்கு கீழ்ப்படுவதுடன், மூன்றாண்டுகளுள் (03) முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டற் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும் ;

(iii) அரச கரும மொழி அல்லாத மொழியொன்றின் மூலம் சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட உத்தியோகத்தர் களினால் தகுதிகாண் காலத்தினுள் ஒரு அரச கரும மொழி தொடர்பான நிர்வாக சுற்றறிக்கை 01/ 2014 இன் பிரகாரம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும் என்பதோடு மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியை ஐந்து (05) வருடங்களினுள் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(iv) அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்குவிதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவைக்கும், இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவை தொடர்பான சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள திருத்தங்களின் உள்ளடக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கும் இந்நியமனம் கட்டுப்பட்டுள்ளது.

*3.* **சம்பள அளவுத்திட்டம்**.- இப்பதவிக்குரிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 03/ 2016 இற்கமைய SL-1-2016 ரூபா 47,615 - 10 × 1,335 - 8 × 1,630 - 17 × 2,170 - ரூபா 110,895 (மாதாந்த) சம்பள அளவுத்திட்டத்திற்கு உரித்தாகும்.

*4.* **கல்வித் தகைமைகள்**.- பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து ஐந்து (05) வருட கட்டடக் கலைஞர் விஞ்ஞானமானி பட்டத்தைப் பெற்றிருத்தல் ;

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து மூன்று வருட விஞ்ஞானமானி கட்டமைப்புச் சுற்றுச்சூழல் தொடர்பான பட்டத்துடன் குறித்த துறையில் பட்டப்பின் பட்ட டிப்ளோமாவைப் பெற்றிருத்தல்;

அல்லது

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து மூன்று வருட விஞ்ஞானமானி கட்டமைப்புச் சுற்றுச்சூழல் தொடர்பான பட்டத்துடன் குறித்த துறையில் ஐந்து (05) வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

5. **தொழிற் தகைமைகள்**.- முன்னைய தொழிற் தகைமை (பட்டய கட்டட கலைஞர் நிலையை) பெற்றிருத்தல். இத்தகைமை இலக்கம் 06 இன் குறிப்பின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம் உரியதாகும்.

*6.* **வயதெல்லை**.- விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதியன்று 21 வயதுக்கும் 36 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு** : இலக்கம் 5 இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெற்றுள்ள அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியத்துடனும் கூடிய பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு அதிகபட்ச வயதெல்லை ஏற்றுபுடையதற்றது.

7. **உடற்தகைமை** :

(i) சகல பரீட்சார்த்திகளும் நாட்டின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றக் கூடியவராகவும்;

(ii) பதவியின் கடமையை நிறைவேற்றுவதற்குப் போதியளவு உடல் உளத் தகைமை கொண்டவராகவும் இருத்தல் வேண்டும்.

*8.* **ஏனைய தகைமைகள்** :

(i) விண்ணப்பதாரிகள் இலங்கை குடிமகனாக இருத்தல் வேண்டும்;

(ii) விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்;

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அவசியமான சகல தகைமைகளையும் எல்லா வகையிலும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்;

(iv) ஒரு பரீட்சார்த்தி இலங்கைக் கட்டடக் கலைஞர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்காக இரு தடவைகளுக்கு மேல் தோற்றாமலிருத்தல்.

*9.*

*9.1* எழுத்துப் பரீட்சை :

*9.1.1* இந்தப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

9.1.2 பாடத்திட்டம் :

| இலக்கம் | பாடங்கள் | அதிகபட்ச புள்ளிகளின் அளவு | சித்திக்குரிய புள்ளி அளவு | காலம் மணித்தியாலம் |
|---|---|---|---|---|
| 01 | நுண்ணறிவுத் தேர்வு | 100 | 40 | 01 |
| 02 | பொது அறிவு | 100 | 40 | 02 |

பாட இலக்கம் 01 - நுண்ணறிவுப் பரீட்சை.-
பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான விளக்கம், சிக்கல்கள் தொடர்பிலான பகுப்பாய்வுத் திறமை, தீர்மானம் எடுத்தல் தொடர்பாக பரீட்சார்த்திக்கு உள்ள புத்திக்கூர்மை மட்டத்தை அளவிடும் வகையில் இவ்வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது.

பாட இலக்கம் 02 - பொது அறிவு.-
இலங்கை அரசியல், சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார நிலைமைகள் பற்றியும், தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக முக்கியத்துவம் பெறும் நவீன விடயங்களும், தேசிய மற்றும் சர்வதேச விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அறிவையும் பரீட்சித்துப் பார்க்கும் நோக்கில் இவ்வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது. வினாப்பத்திரம் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது. முதற்பகுதி சுருக்க வினாக்களைக் கொண்டது. அதற்காக 25 புள்ளிகள் வழங்கப்படும். இரண்டாம் பகுதி பாதி கட்டமைக்கப்பட்ட வினாக்களினைக் கொண்டது. இவ்வினாக்கள் 8 இல் 5 வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும் என்பதோடு அதற்காக 75 புள்ளிகளும் வழங்கப்படும்.

9.1.3 பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடல்.-
பரீட்சையில் சித்தியெய்துவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் ஆகக் குறைந்தபட்சம் 40% புள்ளிகளைப் பெற வேண்டும். அவ்வாறு பெற்றுக்கொள்ளும் விண்ணப்பதாரிகளைத் தெரிவு செய்து அவர்களின் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில், வெற்றிட எண்ணிக்கைக்கு சமனான எண்ணிக்கையினரின் பெயர்களை உள்ளடக்கிய முன்னுரிமை ஆவணமொன்று இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம், செயலாளர், அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் வழங்கப்படும். பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளுக்கும் பரீட்சைப் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியில் அனுப்பி வைத்தல் அல்லது www.results.exams.gov.lk என்ற இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும்.

9.2 நேர்முகப் பரீட்சை :

9.2.1 பொது நேர்முகப் பரீட்சை.-

நேர்முகப் பரீட்சையின்போது, இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் சேவைப் பிரமாணம் மற்றும் அதற்கு ஒத்திசைவாக பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார்களா என்பதனைப் பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் உடற் தகைமைகளைப் பரீட்சித்தல். (புள்ளிகள் வழங்கப்படமாட்டாது).

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகப் பரீட்சைச் சபையினால் தகைமைகள் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

10. **பரீட்சை நிபந்தனைகள் :**

(i) பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடைபெறும். பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். விண்ணப்பதாரிகள் சகல வினாப்பத்திரங்களுக்கும் ஒரே மொழியிலேயே விடையளிக்க வேண்டும். பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்ட பரீட்சை மொழி மூலத்தை மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. சகல பரீட்சார்த்திகளும் வினாப்பத்திரங்கள் அனைத்திற்கும் தோற்ற வேண்டும்.

(ii) பரீட்சைக் கட்டணம் 1,200 ரூபா ஆகும். பரீட்சைக் கட்டணம் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இற்கு வரவு வைக்கும் வகையில் நாட்டின் எந்தவொரு தபாலகம்/உப தபாலகங்களில் செலுத்தி விண்ணப்பதாரியின் பெயரில் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் கழறாது ஒட்டிவிடவும். அப்பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியை தம்வசம் வைத்துக் கொள்வது பிரயோசனப்படும். பரீட்சைக் கட்டணமாக காசுக்கட்டளை அல்லது முத்திரைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(iii) பரீட்சைக்காகச் செலுத்திய பணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது.

(iv) பூரணமற்ற விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**குறிப்பு**.- விண்ணப்பதாரிகள் அனுமதிப்பத்திரமின்றி பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க அனுமதி யளிக்கப்பட மாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் தினத்தில் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் தனது கையொப்பத்தை சான்றுப்படுத்திய அனுமதிப்பத்திரத்தை மாத்திரம் ஒப்படைத்தல் வேண்டும்.

அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு அல்லது அத்தினத்திற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணத்தினைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பிய விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். பரீட்சார்த்தியொருவருக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகைமை கொண்டவர் எனக் கருதப்பட மாட்டார்.

(v) விண்ணப்பப்படிவம் 22 × 29 cm அளவில் ஏ4 கடதாசிகளில் தயாரிக்கப்பட வேண்டியதுடன், 1.0 இலிருந்து 2.9 வரையான தலைப்புக்கள் முதற்பக்கத்திலும், 2.10 இலிருந்து 6.0 வரையான தலைப்புக்கள் இரண்டாம் பக்கத்திலும் எஞ்சியவை மூன்றாவது பக்கத்திற்கும் வருமாறு தயாரிக்கப்பட வேண்டியதோடு அதற்குரிய தகவல்கள் தமது கையெழுத்தினால் தெளிவாக எழுதப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒத்திராத விண்ணப்பப்படிவங்கள், முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்றினை வைத்திருத்தல் பிரயோசனமிக்கதாகும்.

(vi) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளையுடையவர்கள் மாத்திரம் விண்ணப் பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லைக்குட் பட்ட, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் திருத்தமாக பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப்பங்களை அனுப்பி வைத்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சைக்கான அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படும். பரீட்சைக்குத் தோற்றுதல் - விண்ணப்பதாரிக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாக குறிப்பிட்ட பத்திரிகை அறிவித்தல் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாள் கடந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத விண்ணப்பதாரிகள் இருப்பின் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி அது குறித்து இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் ஒழுங்கமைப்பு (நிறுவன மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக்) கிளையிடம் வினவுதல் வேண்டும். அவ்வாறு வினவும் போது விண்ணப்பதாரி தான் தோற்றும் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரியை நேர்த்தியாக குறிப்பிடுதல் வேண்டும். கொழும்புக்கு வெளியே உள்ள விண்ணப்பதாரியாயின் அவ் விபரங்களுடன் பெக்ஸ் ஊடாக பரீட்சை பிரவேசப் பத்திர நிழற்படப் பிரதியொன்றை அனுப்புவதற்காக விண்ணப்பதாரியின் பெக்ஸ் இலக்கத்தைக் குறிப்பிட்டு கோரிக்கைக் கடிதத்தையும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெக்ஸ் இலக்கத்தின் ஊடாக பரீட்சை திணைக்களத்துக்கு அனுப்பி வினவுவது மிகவும் பயன்மிக்கதாகும். அவ்வாறு கோரும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கேட்கப்படும் ஏதேனுமொரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தன்வசம் உள்ள விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதி/ பரீட்சைக் கட்டணம் செலுத்துவது ஏற்புடையதாயின் அதற்குரிய பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தை தபாலில் அனுப்பும் போது பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டினையும் தயாராக வைத்திருப்பது பயன்மிக்கதாகும்.

(vii) இப்பரீட்சை கொழும்பில் நடாத்தப்படுவதோடு, பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும். அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்களுக்குட்பட்டு இப்பரீட்சையினைப் பிற்போடுவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்குரிய அதிகாரம் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு உரிமையுண்டு.

(viii) பரீட்சையினை நடாத்துவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அமுல்படுத்தப்படும் சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் கட்டுப்படுவார்கள். அச்சட்ட விதிகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள்.

(ix) பரீட்சார்த்தியின் ஆளடையாளம்.- பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தினுள் தான் தோற்றும் சகல பாடங்களுக்கும் பரீட்சை மண்டபப் பொறுப்பாளர் திருப்தியுறுகின்ற வகையில் தனது ஆள் அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(i) தேசிய ஆள் அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்திகள் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதே போன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு நிராகரிக்கும் விண்ணப்பதாரி பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்படமாட்டார். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

**கவனத்தில் கொள்ள வேண்டியவை :**

(அ) விண்ணப்பத்துடன் ஏதேனும் ஆவணங்களோ அல்லது அவற்றின் பிரதிகளையோ இணைத்தல் கூடாது:
(ஆ) நேர்முகப் பரீட்சையின்போது கேட்கப்படும் ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாத பரீட்சார்த்திகளின் விண்ணப்பப்படிவங்கள் கருத்திற்கொள்ளப்பட மாட்டாது.

(x) அரசாங்க சேவையில்/ மாகாண சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் தமது திணைக்களம்/ நிறுவனப் பொறுப்பாளர் ஊடாக விண்ணப்பப்படிவங்களை அனுப்புதல் வேண்டும். பரீட்சைக்குத் தோற்ற முன்னர் சகல விண்ணப்பதாரிகளும் அவர்களது கையொப்பத்தை தாம் சேவையாற்றும் நிறுவனத்தின் தலைவர் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும். ஒரு நிறுவனத்தினால் பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரி அவரின் கையொப்பத்தை தான் சேவையாற்றும் நிறுவனத் தலைவரைக் கொண்டு சான்றுப்படுத்திக் கொள்ளல் வேண்டும். அவ்வாறல்லாத விண்ணப்பதாரிகள் தனது கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் /ஓய்வுபெற்ற நிறுவனத் தலைவர், கிராம அலுவலர் பிரிவின் கிராம அலுவலர், சத்தியப்பிரமாண ஆணையாளர், வழக்கறிஞர், முப்படை இராணுவத்தின் அதிகாரம் பெற்ற அலுவலர், அரசாங்க அல்லது மாகாண சேவையின் அல்லது நிரந்தர பதவிநிலை தரத்தையுடைய அலுவலர் அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது பௌத்த விகாரையின் தலைமைப் பிக்கு அல்லது ஏனைய மதத் தளங்களுக்குப் பொறுப்பான மதத் தலைவர்கள் அல்லது அவர்களைக் கொண்டு சான்றுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

12. **போலியான தகவல்களுக்கான தண்டனை**.- எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகைமையற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலும் அவரது பரீட்சார்த்தத்தன்மையை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். பரீட்சார்த்தியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு விடயம் போலியானது எனத் தெரிந்து கொண்டு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாக அறிய வந்தால், அவ்வாறில்லையெனில், ஏதேனும் முக்கியமான தகவலை அவர் வேண்டுமென்றே மறைத்திருந்தால் அவரை அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்வதற்குரிய நடவடிக்கையும் எடுக்கப்படும்.

13. இந்த வர்த்தமானி அறிவித்தலில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிக் கருத்துக்களில் ஏதேனும் முரண்பாடுகள் தோன்றின், அவ்வேளை சிங்கள மொழிக் கருத்தே மேலோங்கி நிற்க வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் பிரகாரம்,

ஜே. ஜே. ரத்னசிறி,
செயலாளர்,
அரசாங்க சேவைகள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுந்திர சதுக்கம்,
கொழும்பு 07,
2020, செத்தெம்பர் 03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை கட்டடக் கலைஞர் சேவையின் III ஆம் தரத்திற்கு சேர்த்துக்கொள்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை (2019) 2020**

Open Competitive Examination for Recruitment to Grade III of Sri Lanka Architectural Service - (2019) 2020

1. பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4 ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

* விண்ணப்பப்படிவத்தினை நிரப்ப வேண்டியது பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலாகும்.

2.

2.1 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) :-
(உதாரணம் : HERATH MUDIYANSELAGE SAMAN KUMARA GUNAWARDHANA)
..........................................................................................................
..........................................................................................................

2.2 முதலெழுத்துக்களுடன் பெயர், முதலெழுத்துக்களை இறுதியில் எழுதுக (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :-
(உதாரணம் : GUNAWARDHANA, H. M. S. K.)
..........................................................................................................

2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :-
..........................................................................................................
..........................................................................................................

2.4 தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

2.5 நிரந்தர முகவரியினை (ஆங்கில கெப்பிற்றல் எழுத்துக்களில்) :----.
(இம் முகவரிக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும்.)
..........................................................................................................
..........................................................................................................

2.6 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :-
..........................................................................................................
..........................................................................................................

2.7 தொலைபேசி இலக்கம் : கைடக்கம்: ☐☐☐☐☐☐☐☐☐☐ வதிவிட: ☐☐☐☐☐☐☐☐☐☐

2.8 பால் (ஆண்/பெண்) ஆண் - 0 பெண் - 1 ☐ (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்)

2.9 பிறந்த திகதி :

ஆண்டு : ☐☐☐☐ மாதம் : ☐☐ திகதி : ☐☐

2.10 விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு வயது :

வருடங்கள்: ☐☐ மாதங்கள் : ☐☐ நாட்கள் : ☐☐

2.11 தபாலக நகரம் :----.

2.12 இனம் : ☐ (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுவும்.)

சிங்களம்-1, தமிழ்-2, இந்திய தமிழ்-3, முஸ்லிம்-4, ஏனைய-5

2.13 விவாகமானவர்/விவாகமாகாதவர் பற்றி :
(விவாகமானவர்-1, விவாகமாகாதவர்-2) ☐ (உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுவும்.)

2.14 மின்னஞ்சல் முகவரி :-----.

3. கல்வித் தகைமைகள் :

3.1 பட்டம் :----.
3.2 பட்டம் பெற்ற திகதி :----.
(இத்தகைமைகள் உள்ளதா என்பதனைப் பார்ப்பதற்கு அறிவித்தல் 04 இனை தயவுடன் நன்றாக வாசிக்கவும்.)
3.3 பரீட்சை சுட்டிலக்கம் :----.
3.4 பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலம் :----.

4. ஏனைய தகைமைகள் :
முன்னைய தொழிற் தகைமை (பட்டய கட்டட கலைஞர் நிலையை) முழுமைப்படுத்திய திகதி :----.

5. பற்றுச்சீட்டினை சரியாக இங்கு ஒட்டவும் :-

பற்றுச்சீட்டு இலக்கம் :----.
செலுத்திய அலுவலகம் :----.
திகதி :----.

6. ஏதேனும் குற்றச் செயலொன்றுக்கு எப்போதாவது அல்லது நீதிமன்றத்தில் குற்றவாளியாக இருந்துள்ளீரா? அக்குற்றம் மற்றும் கிடைக்கப்பெற்ற தண்டனை பற்றி விபரமாக குறிப்பிடவும் :----.

7. விண்ணப்பதாரியின் சான்றிதழ் :

இவ் விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில், உண்மையானவை எனவும், சரியானவை எனவும் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட இலக்கம் .................... மற்றும் .................... ஆந் திகதியுடைய பற்றுச்சீட்டினை இதனுடன் ஒட்டியதாகவும் பிரகடனம் செய்கின்றேன். மேலும் பரீட்சையின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப செயற்படுவதற்கும், இப்பரீட்சையின் நிபந்தனைகளுக்கு இணங்க நான் தகைமையற்றவர் எனத் தெரிந்தால், பரீட்சைக்கு முன் அல்லது தோற்றும்போது அல்லது அதன் பின்னர் தோற்றுவதற்கு அனுமதியளிக்கப்பட மாட்டேன் என்ற தீர்மானத்திற்கு உடன்படுகிறேன். மேலும் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் பிழை அல்லது உண்மைக்குப் புறம்பானதாக இருப்பின் இழப்பீடுகள் எதுவுமின்றி சேவையிலிருந்து பதவியிறக்கம் செய்வதற்கும், அவ்வாறே பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்படுகின்ற சட்டதிட்டங்கள் மற்றும் பெறுபேற்றினை வெளியிடுதல் தொடர்பாக எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு கட்டுப்படுவதாகவும் உறுதியளிக்கின்றேன்.

----
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

8. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை சான்றுப்படுத்துதல் (வர்த்தமானி அறிவித்தலில் 9 (X) இன் பிரகாரம் அமைதல் வேண்டும்.)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் ................................. (முழுப்பெயர்) என்பவரை நான் தனிப்பட்ட வகையில் அறிவேன் என்றும், உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும், அதற்கான பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதாகவும் ............................ ஆந் திகதி அவரின் கையொப்பம் என் முன்னிலையில் இடப்பட்டதாகவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
அத்தாட்சிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

திகதி :----.

பெயர் :----.
கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்துபவரின் முழுப் பெயர் :----.
பதவிகள் :----.
முகவரி :----.
(பதவி முத்திரையிட்டு அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.)

9. நிறுவனத் தலைவரின் சான்றிதழ் (அரசாங்க /மாகாண அரசாங்க/விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ஆகிய நான் இவ் அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் .. ............................... சேவையாற்றுவதோடு, அவரின் விண்ணப்பத்தை சிபாரிசு செய்து முன்வைக்கின்றேன். இப்பதவிக்காக தேர்ந்தெடுக்கப்படுமாயின் இந்நிறுவனத்தின் சேவையிலிருந்து விடுவிப்பதற்கு அவசியப்படும் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும் என சான்றுரைக்கின்றேன்.

----,
(திணைக்களம்/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.)

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.
(பதவி முத்திரையிட்டு அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும்.)

9-455

---

திருத்தம்

**கல்வி அமைச்சு**

திறன்கள் அபிவிருத்தி, தொழிற் கல்வி, ஆராய்ச்சி மற்றும் புத்தாக்க இராஜாங்க அமைச்சு
இலங்கை உயர்மட்ட தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம் (SLIATE)

**2020 ஆம் கல்வியாண்டிற்காக உயர் தொழில்நுட்பவியல் நிறுவகங்களுக்கான மாணவர்களின் அனுமதி**

2020.09.04 ஆந் திகதிய 2192 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியான 09-348 ஆம் அறிவித்தலின் 10 ஆம் பந்தி பின்வருமாறு திருத்தப்படுகின்றது.

**10. ஆங்கிலத்தில் உயர் தேசிய டிப்ளோமா** (HND in English)

10.1 - **முழு நேரம் - 2 ½ வருடங்கள்.**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) எந்த ஒரு துறையில் ஒரே அமர்வில் க.பொ.த. (உ-த) பரீட்சையில் சித்தி,

மற்றும்

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் க.பொ.த. (உ.த.) பரீட்சையில் பொதுவான ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி.

அல்லது

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் க.பொ.த. (ச.த.) பரீட்சையில் பொதுவான ஆங்கில பாடத்தில் திறமைச் சித்தி

அல்லது

இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் நிருவகிக்கப்படும் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் Appreciation of English Literary Texts பாடத்தில் பெற்ற சாதாரண சித்தி.

பேராசிரியர் கே. எல். ஜயரத்ன,
பணிப்பாளர் நாயகம்
இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்
(SLIATE)

09-602

## திருத்தம்

## அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

## முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019 (2020)

2020, யூலை மாதம் 17 ஆந் திகதிய 2185 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட "முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2019 (2020)" பரீட்சை அறிவித்தலின், 8.0 தகைமைகள் பந்தியின் பகுதி (ii), பகுதி (iii) இன் குறிப்பு மற்றும் பகுதி (vi) கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தப்படுகிறது.

8.0 **தகைமைகள்**.-

(ii) விண்ணப்பங்கள் கோரும் இறுதித் திகதியில் நிரந்தர நியமனம் ஒன்றில் குறைந்தபட்சம் 5 வருடங்கள் உயிர்ப்பானதும் திருப்திகரமானதுமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருக்க வேண்டுமென்பதுடன் அது திணைக்களத் தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். அவ்வாறே விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் கோரும் இறுதித் திகதிக்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய ஒழுக்காற்றுத் தண்டனை பெற்றிருக்காதிருத்தல் வேண்டும் ;

(iii) **குறிப்பு**: 2001.11.26 ஆந் திகதிக்கு முன்னர் சேவையில் நிரந்தரப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பங்கள் கோரும் இறுதித் திகதிக்கு 18 வருட உயிர்ப்புடனான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்துள்ள மற்றும் இவ்வறிவித்தலின் 8.2 ஆம் பந்தியில் எதிர்பார்க்கப்படும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஆரம்ப மட்டத்தின் PL வகுதியின் சம்பள குறியீட்டின் கீழ் சம்பளம் பெறும் சகல அலுவலர்களுக்கும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தொடர்ச்சியான பரீட்சை வாய்ப்புக்கள் இரண்டை வழங்குவதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதுடன் அதன்படி அத்தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள PL வகுதியின் கீழ் சம்பளம் பெறும் அலுவலர்களுக்கும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

(vi) பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான அனைத்துத் தகைமைகளையும் 2020, செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதியில் பூர்த்தி செய்திருப்பது அவசியமாகும்.

02. அவ்வர்த்தமானி அறிவித்தலின் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் அவ்வாறே வலுவிலிருக்கும் என்பதுடன் இத்திருத்தத்தினால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2020.09.28 ஆந் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

03. இதுவரை இப்பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள அலுவலர்கள் இத்திருத்தம் காரணமாக மீண்டும் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டியதில்லை என அறிவிக்கப்படுகின்றது.

எஸ். ஆலோக்க பண்டார,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்,
அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு.

அரசாங்க சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 7,
2020, செத்தெம்பர் 04.

09-488

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு I தரம் III தொடர்பாக ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018 (2020)

இலங்கை தகவல், தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு I தரம் III ஐச் சேர்ந்த பதவிகளில் நிலவும் 34 வெற்றிடங்களுக்குத் தகுதியானவர்களை தேர்ந்தெடுப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நியமங்களுக்கு அமைவாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன, இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை இணையவழி (online) மூலம் மாத்திரமே அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை இணையவழி ஊடாக அனுப்பியதன் பின்னர் அதனைப் பதிவிறக்கம் செய்து அதன் அச்சுப்பிரதியை விண்ணப்பதாரியின் ஒப்பத்தைச் சான்றுப்படுத்தி ஏற்புடையதாயின் நிறுவனத் தலைவரின் சான்றுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவனம் சார் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. 1503, கொழும்பு என முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு I தரம் III தொடர்பாக ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2018 (2020)" என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். மேலும், விண்ணப்ப முடிவுத் திகதி 2020.10.26 ஆகும். இப்பரீட்சை 2021, சனவரி மாதம் கொழும்பில் நடைபெறும்.

**குறிப்பு**:- விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை தபால் மூலம் அனுப்புவது கட்டாயமானது. அத்துடன் தபாலில் காணாமற் போதல் அல்லது தாமதம் ஆகியன தொடர்பாக செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்பினை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றல் வேண்டும்.

1. **சேவைக்கான ஆட்சேர்ப்பு முறை** :

(i) எழுத்துமூல பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சை என்பனவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும்.

போட்டிப் பரீட்சையினூடாக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யும் வகையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் வரிசைக் கிரமம் உறுதியாக கடைப்பிடிக்கப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும்.

நியமனத் திகதி மற்றும் நியமனங்களின் எண்ணிக்கை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் மூலம் தீர்மானிக்கப்படும்.

(ii) நிலவுகின்ற வெற்றிடங்களின் எண்ணிக்கையின் 3% வீதம் அங்கவீன விண்ணப்பதாரிகளுக்காக ஒதுக்கப்படும். பரீட்சையில் சித்தியடையும் மாற்றுத்திறனாளிகள் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் பரீட்சார்த்திகளின் வரிசைக் கிரமப்படி இந் நியமனம் வழங்கப்படும். தெரிவு செய்யப்படும் பரீட்சார்த்தி நிபுணத்துவ வைத்திய பரிசோதனை சபைக்கு அனுப்பப்பட்டு, நிபுணத்துவ வைத்திய அறிக்கை ஒன்றின் மூலம் தமது அங்கவீன நிலை, குறித்த பதவியின் பணிகளை நிறைவேற்றுவதற்கு தடையாக அமையாது என்பதனை உறுதிப்படுத்தல் வேண்டும்.

2. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்**:-

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமாகும். உங்களுக்கு உரித்தடையதாகும் ஓய்வூதியத் திட்டம் குறித்து அரசினால் எதிர்வரும் காலங்களில் எடுக்கப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு உட்படவேண்டும். மேலும், விதவைகள்/தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும். அரசினால் அவ்வப்போது விதிக்கப்படும் வகையில் தங்களால் பங்களிப்புத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

(ii) இப் பதவிக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் மூன்று (03) ஆண்டு நன்னடத்தைக் காலத்திற்கு உட்படுத்தப்படுவதுடன், மேற்படி மூன்று (03) ஆண்டு காலத்தினுள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

(iii) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 01/2014 இற்கு அமைய மற்றும் அதற்கு இணையான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப பதவியில் சேர்ந்து ஐந்து (05) வருடங்களினுள் உரிய அரசகரும மொழித் தேர்ச்சியை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iv) இந்நியமனம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1894/26 மற்றும் 2014.12.26 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் சேவைக்கான சேவைப் பிரமாணத்தின் கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, அச்சேவைப் பிரமாணக் குறிப்பில் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ள, இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களும், தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் இந் நியமனம் கட்டுப்பட்டுள்ளது.

(v) தாங்கள் நியமனம் பெறுவதற்கு தகுதியுடைய மொழி ஊடகமாக அமைவது, விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி ஊடகமாகும்.

3. **சம்பள அளவுத் திட்டம்**.- 2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 இன் அட்டவணை I இற்கு ஏற்ப இப் பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 47,615.00-10×1,335-8×1630-17×2,170.00 ரூபா 110,895/- (SL-1-2016) ஆகும்.

4. **கல்வித் தகைமைகள்**.-

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்தோ அல்லது பட்டமளிப்பு நிறுவனம் ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்தோ கணினியியல் / தகவல் தொழிநுட்பம் / கணினிப் பொறியியல் அல்லது கணினித் தொழிநுட்பம் ஆகியனவற்றில் ஏதாவதொரு பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(2) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்தோ அல்லது பட்டமளிப்பு நிறுவனம் ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்தோ பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். (அதில் பட்ட கற்கைநெறி முழுவதிலும் ஆகக் குறைந்தது 1/3 பகுதி கணினியியல் /தகவல் தொழிநுட்பம் தொடர்பானதாக இருத்தல் வேண்டும்.)

மற்றும்

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்தோ அல்லது பட்டமளிப்பு நிறுவனம் ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்தோ கணினியியல் /தகவல் தொழிநுட்பம் தொடர்பாக பட்டப்பின் டிப்ளோமா ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

5. **வயதெல்லை**.- ஆகக் குறைந்த வயதெல்லை 21 ஆகும். ஆகக் கூடிய வயதெல்லை 35 ஆகும். (அதற்கமைய வயதெல்லை தொடர்பான தகைமை பெறுவது, விண்ணப்பதாரியின் பிறந்த திகதி 1999.10.26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் மற்றும் 1985.10.26 ஆந் திகதி அல்லது அதற்குப் பின்னராயின் மாத்திரமாகும்)

**குறிப்பு**.- இப் பரீட்சையின் போது மாத்திரம் அரச சேவையில் / மாகாண அரச சேவையில் நிரந்தர பதவியொன்றில் சேவையிலீடுபடும் அலுவலர்களுக்கு வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படாமல் இப் பரீட்சைக்கு தோற்றுவதற்குரிய வாய்ப்பளிக்கப்படும்.

6. **தேகாரோக்கியம்**.- ஒவ்வொரு விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும், பதவிக்குரியதான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உரிய போதிய உடல், உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

7. **பிற தகைமைகள்**.-

(i) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையொருவராக இருத்தல் வேண்டும் ;
(ii) விண்ணப்பதாரி சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும் ;
(iii) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில், பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனைத்து தகைமைகளையும் நிபந்தனைகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

*8.* **ஆட்சேர்ப்பு முறை.-**

*8.1* **எழுத்துமூலப் பரீட்சை.-**

*8.1.1* இப் பரீட்சையானது, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

| விடயம் | காலம் | அதிகூடி புள்ளிகள் | சித்திபெறும் புள்ளிகள் |
|---|---|---|---|
| பொது விவேகம் | 1 மணி | 100 | 40 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான கிரகித்தல் | 2 மணி | 100 | 40 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் முகாமைத்துவம் தொடர்பான உளச்சார்பு | 2 மணி | 100 | 40 |

**குறிப்பு.-** கடமை நோக்கங்களுக்காக பரீட்சார்த்திகளின் தகைமையையும் ஆற்றலையும் பரீட்சிக்கக் கூடியதாக இவ்வினாப்பத்திரம் அமையும். இப் பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருந்த போதிலும் நியமனத்திற்கான தகைமையைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40% வீதத்தையாவது பெற வேண்டியதுடன், பரீட்சைக்கான மொத்தப் புள்ளிகளில் 50% வீதத்தையாவது பெற்றுக் கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு விடைத்தாளிலும் தெளிவற்ற கையெழுத்து, எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள் ஆகியனவற்றுக்கு புள்ளிகள் குறைக்கப்படும். பெற்றுக் கொண்ட புள்ளிகளின் முன்னுரிமை கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டு, போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யக் கூடியவாறு நியமனங்கள் வழங்கப்படும்.

*8.1.2* பாடவிதானம் :

| *வினாத்தாளின் பெயர்* | *பாடவிதானம்* |
|---|---|
| பொது விவேகம் | புள்ளிவிபரவியல் ரீதியாக, மொழி ரீதியாக, வடிவக்கட்டமைப்புக்கள் உறவுகளுக்கிடையிலான தொடர்புகள் போன்ற பிரச்சினைகள் மட்டிலான பகுப்பாய்வுத் திறமை தர்க்கரீதியான அறிவு, பொருள்கோடல் திறமை, வேறு நிலைமைகளுக்கு உரித்தாக்கிக்கொள்வதற்கான ஆற்றல் மற்றும் முடிவுகளை எட்டுதல் தொடர்பாக பரீட்சார்த்தியிடம் காணப்படும் அறிவு மட்டத்தினை அளவிடுதல் இங்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது. (இவ் வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்க விடைகளுக்கான வினாக்கள் என்பவற்றைக் கொண்ட 50 வினாக்களை உள்ளடக்கியதாகும் சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும். ) |
| தகவல், தொடர்பாடல் தொழிநுட்பம் தொடர்பான கிரகித்தல் | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகாமைத்துவத்தின் கருத்துருவாக்குதல், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சிக்கல்களைத் தீர்க்கும் ஆற்றல், தகவல் மற்றும் தொழில்நுட்ப கருத்திட்ட முகாமைத்துவ ஆற்றல் மற்றும் தரப்படுகின்ற தலைப்புக்களுக்கான தளப்பகுப்பாய்வு செய்தல், திட்டமிடல் மற்றும் மென்பொருள் தளம் மற்றும் அவற்றின் விருத்தி தொடர்பாக பரீட்சார்த்தியின் ஆற்றல் இங்கு பரீட்சிக்கப்படுகின்றது. (இவ் வினாத்தாள் சுருக்க விடைகளுக்கான வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்கள் என்பவற்றைக் கொண்ட வினாக்களை உள்ளடக்கியதாகும் சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.) |
| தகவல், தொடர்பாடல் தொழிநுட்ப முகாமைத்துவ உளச்சார்பு | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் தொடர்பான புதிய போக்குக்களுடன், மென்பொருட்கள் விருத்தி செய்தல், நிறுவுதல், அவற்றைப் பேணுதல் தொடர்பான அறிவைப்பயன்படுத்துவதன் மூலம் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகாமைத்துவம் தொடர்பில் விண்ணப்பதாரியின் உளச்சார்பினை அளவீடு செய்யும் முகமாக இப் பரீட்சை வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது. (இவ் வினாத்தாள் சுருக்க விடைகளுக்கான வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்கள் என்பவற்றைக் கொண்ட வினாக்களை உள்ளடக்கியதாகும் சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.) |

8.2 **நேர்முகப் பரீட்சை.-**

8.2.1 **பொது நேர்முகப் பரீட்சை.-**

சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு ஏற்புடையதாக வெளியிடப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என பரீட்சிப்பதற்காக இந் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுகின்றது. புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

9. **பரீட்சை நிபந்தனைகள்.-**

(i) பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் விரும்புகின்ற ஏதாவதொரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். அத்துடன் பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் சகல வினாத்தாள்களிலும் உள்ள வினாக்களுக்கு ஒரு மொழியிலேயே பதிலளித்தல் வேண்டும். பரீட்சார்த்திகளினால் தத்தமது விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தினை மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. எல்லா பரீட்சார்த்திகளும் மூன்று வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

(ii) இணையவழியில் (Online) அனுப்பும் பரீட்சை விண்ணப்பங்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் இணையவழி ஊடாக அனுப்பி வைக்கும் மென் பிரதி மற்றும் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் அச்சுப் பிரதி (Print out) ஆகிய இரண்டையும் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றதன் பின்னர் அம்மென் பிரதி மற்றும் அச்சுப் பிரதி சரிபார்க்கப்படுவதுடன் (Verify), செல்லுபடியாகும் விண்ணப்பமாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதா/இல்லையா என தொகுதியினுள் பிரவேசிப்பதற்கு பயன்படுத்திய தொலைபேசி இலக்கத்துக்கு குறுந்தகவல் (SMS) இன் மூலம் அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கு அறிவிக்கப்படும். இணையவழி ஊடான விண்ணப்பத்தை பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்கு தயாரிக்கப்பட்டுள்ள பொதுவான அறிவுரைப் படிவம் (Common Instructions) இனை பதிவிறக்கம் செய்தல் வேண்டும். விண்ணப்பத்தை நிரப்பும் போது இவ்வறிவுரைகளை கண்டிப்பாக பின்பற்றல் வேண்டும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியினைப் பெற்றதன் பின்னர், அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தங்களும் செல்லுபடியாகும் திருத்தங்களாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. பூரணமற்ற விண்ணப்பங்கள் எந்த அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(iii) பரீட்சைக் கட்டணம் ரூபா 1,200.00 ஆகும். இப்பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது இணையவழித் தொகுதியின் ஊடாக வழங்கப்படும் பின்வரும் கட்டணங்களைச் செலுத்தும் முறைமையின் கீழ் மாத்திரம் கொடுப்பனவு இடம்பெறுதல் வேண்டும்.

i. ஏதேனும் வங்கிக் கடன் அட்டை மூலம் (Any Bank Credit Cards)

ii. ஏதேனும் வங்கி பற்று அட்டை மூலம் (Any Bank Debit Cards)

iii. இலங்கை வங்கி இணையவழி வங்கி முறை (Bank of Ceylon Online Banking Method)

iv. ஏதேனும் இலங்கை வங்கிக் கிளை மூலம் (Bank of Ceylon teller Slip Payment)

v. தபால் திணைக்களத்தின் ஏதேனும் தபாலகத்தின் மூலம் (Postal Department Payment at any Post Office)

**குறிப்பு** : மேற்படி முறைகள் மூலம் கொடுப்பனவினை மேற்கொள்ள முடியும் என்பதுடன் அவை தொடர்பான அறிவுரைகள் இணையத்தளத்தின் பரீட்சைக்குரிய தொழில்நுட்ப ஆலோசனை என்பதன் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

iv. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டதாக குறுந்தகவல் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக்கான முழுத் தொகையையும் செலுத்த வேண்டும் என்பதோடு, பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தப்பட்டிருப்பின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கட்டண முறைமையின் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படும் கோளாறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்புக் கூறமாட்டாது.

v. பரீட்சைக்காக செலுத்தப்பட்ட தொகை எந்தவொரு காரணத்திற்காகவும் மீளளிக்கப்பட அல்லது மற்றொரு பரீட்சைக்காக மாற்றப்படவும் மாட்டாது.

vi. விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதேனும் ஒரு நிறுவனத்தின் மூலம் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தனது நிறுவனத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரொரு

வரினால், அவ்வாறில்லாத விண்ணப்பதாரி ஒருவர் தனது கையொப்பத்தை அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் /ஓய்வுபெற்ற அலுவலர், பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான் /சத்தியப்பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி /பிரசித்த நொத்தாரிசு /முப்படையின் அதிகாரம் பெற்ற அலுவலர் அல்லது ரூபா 240,360.00 இற்கும் கூடுதலான வருடாந்த திரட்டிய சம்பளத்தினைப் பெற்றுக்கொள்ளும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவிநிலை தரத்துடைய அலுவலர் அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது தலைமை பிக்கு அல்லது வேறு மத ஸ்தலமொன்றில் பொறுப்பாகவுள்ள அல்லது மதகுருவாக கருதப்பட முடியுமான நிலையில் உள்ள ஒருவரினால் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**:- பரீட்சை அனுமதி அட்டை இன்றி பரீட்சை மண்டபத்திற்கு நுழைவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் திகதியில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது பதவிக்கான தகைமையை பூர்த்தி செய்துள்ளார் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படலாகாது.

vii. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லை, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு முறையாக இணையவழி மூலம் அனுப்பி வைத்து, விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அது பற்றி பத்திரிகை அறிவித்தல் மற்றும் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும். அவ் அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்களின் பின்னரும் பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு (நிறுவனம் சார் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக்) கிளையிடம் அறிவிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரியினால் தான் தோற்றவுள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம் மற்றும் முகவரி என்பனவற்றை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளிப் பிரதேசம் எனின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் கொண்ட உமது கோரிக்கைக் கடிதத்தை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு பெக்ஸ் மூலம் அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சைத் திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தம் வசம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியதன் பின்னர் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியை தபாலிடும் போது பதிவு செய்த பற்றுச்சீட்டினையும் வைத்திருப்பது பிரயோசனமாகும்.

viii. அராசங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின்படி, பரீட்சையை காலந் தாழ்த்துவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கான அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு உண்டு.

ix. பரீட்சை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதற்கு பரீட்சார்த்திகள் கடமைப்பட்டுள்ளனர். அவ் ஒழுங்கு விதிகளை மீறுமிடத்து, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படவேண்டி ஏற்படும்.

x. பரீட்சார்த்திகள் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்:

(i) தேசிய அடையாள அட்டை;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு;
(iii) செல்லுபடியாகும் இலங்கைச் சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசித்தது முதல் பரீட்சை நிறைவு பெற்று வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

xi. பெறுபேறுகளை வெளியிடல் – எழுத்துமூல பரீட்சையில் ஒவ்வொரு பாடத்துக்கும் 40% வீதத்திற்கு குறையாமலும் மற்றும் முழுமொத்த பரீட்சையினதும் புள்ளிகளின் எண்ணிக்கையின் 50% அல்லது அதற்கு அதிகமாகவும் புள்ளிகள் பெற்ற பரீட்சார்த்திகளை தேர்ந்தெடுத்து அவர்களின் அப்புள்ளிகளின் மொத்த எண்ணிக்கைக்கு

ஏற்ப திறமை அடிப்படையில் நிரப்ப எதிர்பார்க்கப்படும் வெற்றிட எண்ணிக்கைக்கு சமனான பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட முன்னுரிமை பட்டியல் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியாக அனுப்பிவைத்தல் அல்லது www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடுவதும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும்.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ் அறிவித்தலில் மொழி ரீதியான பதங்களுக்கிடையில் ஏதேனும் பொருத்தமற்ற தன்மை அல்லது இணக்கமின்மைகள் காணப்படின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி அறிவித்தலின் படி நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே.ஜே. ரத்னசிரி,
செயலாளர்,
அரசாங்க சேவைகள், மாகாண சபைகள்
மற்றும் உள்ளூராட்சி அமைச்சு.

2020, செத்தெம்பர் 14.

**விசேட கவனத்திற்கு :**

இப் பரீட்சைக்கு இணையவழி (Online) முறை மூலம் விண்ணப்பங்கள் கோரப்படுவதால் 2020.09.25 ஆந் திகதியின் பின்னரே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

09-773

---

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

### இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு I தரம் III க்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2018 (2020)

இலங்கை தகவல், தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு I தரம் III ஐச் சேர்ந்த பதவிகளில் 15 வெற்றிடங்கள் நிலவுகின்றமையினால், அதற்குத் தகுதியானவர்களை தேர்ந்தெடுப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை தொடர்பாக அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நியமங்களுக்கு அமைவாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன, அதற்கான விண்ணப்பங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் www.doenets.lk என்ற இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதுடன், விண்ணப்பங்களை இணையவழி (online) முறை மாத்திரமே அனுப்ப வேண்டும். விண்ணப்பங்களை இணையவழி ஊடாக அனுப்பியதன் பின்னர் அதனைப் பதிவிறக்கம் செய்து அதன் அச்சுப்பிரதியை விண்ணப்பதாரியின் ஒப்பத்தைச் சான்றுப்படுத்தி ஏற்புடையதாயின் நிறுவனத் தலைவரின் சான்றுடன் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக் கூடியவாறு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு (நிறுவனம் சார் மற்றும் வெளிநாட்டு பரீட்சைகள்) கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த. பெ. 1503, கொழும்பு என முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழிநுட்ப சேவையின் வகுப்பு I தரம் III க்கு ஆட்சேர்ப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சை - 2018 (2020)" என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும். மேலும், விண்ணப்பங்கள் முடிவுத் திகதி 2020.10.26 ஆகும். இப்பரீட்சை 2021 சனவரி மாதம் கொழும்பில் நடைபெறும்.

**குறிப்பு.**- விண்ணப்பப்படிவத்தின் அச்சுப் பிரதியை தபால் மூலம் அனுப்புவது கட்டாயமானது. அத்துடன் தபாலில் காணாமற் போதல் அல்லது தாமதம் ஆகியன தொடர்பாக செய்யப்படும் முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரை விண்ணப்பப்படிவத்தை தாமதப்படுத்துவதனால் ஏற்படக்கூடிய இழப்பினை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றல் வேண்டும்.

**1. சேவைக்கான ஆட்சேர்ப்பு முறை :**

(i) எழுத்துமூல பரீட்சை மற்றும் பொது நேர்முகப் பரீட்சை என்பனவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் ஆட்சேர்க்கப்படும்.

போட்டிப் பரீட்சையினூடாக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யும் வகையில் பெற்றுக் கொண்ட புள்ளிகளின் வரிசைக் கிரமம் உறுதியாக கடைப்பிடிக்கப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும்.

நியமனத் திகதி மற்றும் நியமனங்களின் எண்ணிக்கை அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் மூலம் தீர்மானிக்கப்படும்.

**2. சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள்:-**

(i) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியத் திட்டத்திற்குட்பட்டதுமாகும். மேலும், விதவைகள்/ தபுதாரர்கள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத்திட்டத்திற்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

(ii) இப் பதவிக்கு நியமிக்கப்படும் அலுவலர்கள் ஒரு (01) ஆண்டு பதிற்கடமைக் காலத்திற்கு உட்படுத்தப்படுவதுடன், ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு மூன்று (03) ஆண்டு காலத்தினுள் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்துதல் வேண்டும்.

(iii) அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 01/2014 இற்கு அமைய மற்றும் அதற்கு இணையான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப பதவியில் சேர்ந்து ஐந்து (05) வருடங்களினுள் உரிய அரசகரும மொழித் தேர்ச்சியை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iv) இந்நியமனம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1894/26 மற்றும் 2014.12.26 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் சேவைப் பிரமாணத்தின் கட்டளைகள் மற்றும் நிபந்தனைகளுக்கும், இதுவரையில் செய்யப்பட்ட திருத்தங்களுக்கும், இதற்குப் பின்னர் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கும், தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குவிதிகளுக்கும் இந்நியமனம் கட்டுப்பட்டுள்ளது.

(v) தாங்கள் நியமனம் பெறுவதற்கு தகுதியுடைய மொழி ஊடகமாக அமைவது, விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழி ஊடகமாகும்.

**3. சம்பள அளவுத் திட்டம்.-**

2016.02.25 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 03/2016 (SL–1-2016) இன் அட்டவணை I இற்கு ஏற்ப இலங்கை தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் I ஆம் வகுப்பின் III ஆந் தரத்திற்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம் ரூபா 47,615.00-10×1,335-8×1630-17×2170 - ரூபா 110,895.00 ஆகும்.

**4. கல்வி தகைமைகள் மற்றும் அனுபவம் :**

4.1 அனுபவம்.-

(1) 2 ஆம் வகுப்பின் I ஆந் தரத்தின் உத்தியோகத்தராக இருத்தல் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு சுற்றறிக்கை 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்று தண்டனைக்கு உட்பட்டிராதிருத்தல்

அல்லது

(2) (அ) 2 ஆம் வகுப்பின் II ஆந் தரத்தில் 05 வருட முனைப்பானதும் திருப்திகரமானதும் சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்து நியமனம் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தராக இருத்தல் மற்றும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு இலக்கம் 01/2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய ஒழுக்காற்று தண்டனைக்கு உட்பட்டிராதிருத்தல்.

மற்றும்

(ஆ) இலக்கம் 4.2 இல் காட்டப்பட்டுள்ள கல்வித் தகைமையை முழுமைப்படுத்தியிருத்தல்.

மற்றும்

(இ) அத்தரத்திற்குரிய வினைத்திறன் காண் தடைதாண்டலில் சித்தியெய்திருத்தல்.

*4.2 கல்வித் தகைமைகள்.-*

(1) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்தோ அல்லது பட்டமளிப்பு நிறுவனம் ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்தோ கணினியியல்/ தகவல் தொழில்நுட்பம்/ கணினிப் பொறியியல் அல்லது கணினி தொழில்நுட்பம் ஆகியனவற்றில் ஏதாவதொரு பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(2) (i) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்தோ அல்லது பட்டமளிப்பு நிறுவனம் ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்தோ பட்டம் ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும். (அதில் பட்ட கற்கைநெறி முழுவதிலும் ஆகக் குறைந்தது 1/3 பகுதி கணினியியல் / தகவல் தொழில்நுட்பம் தொடர்பானதாக இருத்தல் வேண்டும்.)

மற்றும்

(ii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்தோ அல்லது பட்டமளிப்பு நிறுவனம் ஒன்றாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றிலிருந்தோ கணனிவியல் / தகவல் தொழிநுட்பம் தொடர்பாக பட்டப்பின் டிப்ளோமா ஒன்றினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**கவனிக்கவும்**: இக்கல்வித் தகைமைகள் 4.1.1 இல் குறிப்பிடப்படும் அலுவலர்களுக்கு ஏற்புடையதாகாது.

5. **வயதெல்லை** : ஏற்புடையதன்று

6. **தேகாரோக்கியம்**:- ஒவ்வொரு விண்ணப்பதாரர்களும் இலங்கையில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கும் பதவிக்குரியதான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உரிய போதிய உடல், உள ஆரோக்கியம் உடையவராக இருத்தல் வேண்டும்.

7. **பிற தகைமைகள்**:-

(i) விண்ணப்பதாரி இலங்கை பிரசையொருவராக இருத்தல் வேண்டும்.

(ii) விண்ணப்பதாரி சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியில், பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான அனைத்து தகைமைகளையும் நிபந்தனைகளையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

8. **ஆட்சேப்பு முறைமை**.-

8.1 எழுத்துப் பரீட்சை.-

8.1.1. இப் பரீட்சையானது, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும்.

| விடயம் | காலம் | அதிகூடி புள்ளிகள் | சித்திபெறும் புள்ளிகள் |
|---|---|---|---|
| 1. பொது விவேகம் | 1 மணி | 100 | 40 |
| 2. தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகாமைத்துவ உளச்சார்பு | 2 மணி | 100 | 40 |

**குறிப்பு**.- கடமை நோக்கங்களுக்காக பரீட்சார்த்திகளின் தகைமையையும் ஆற்றலையும் பரீட்சிக்கக் கூடியதாக இவ்வினாப்பத்திரம் அமையும். இப் பரீட்சை ஒரு போட்டிப் பரீட்சையாக இருந்த போதிலும் நியமனத்திற்கான தகைமையைப் பெறுவதற்கு ஒவ்வொரு பாடத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ள புள்ளிகளில் ஆகக் குறைந்தது 40% வீதத்தையாவது பெற வேண்டியதுடன், பரீட்சைக்கான மொத்தப் புள்ளிகளில் 50% வீதத்தையாவது பெற்றுக் கொள்ளல் வேண்டும். ஒவ்வொரு விடைத்தாளிலும் தெளிவற்ற கையெழுத்து, எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழைகள் ஆகியனவற்றுக்கு புள்ளிகள் குறைக்கப்படும். பெற்றுக் கொண்ட புள்ளிகளின் முன்னுரிமை கண்டிப்பாகப் பின்பற்றப்பட்டு, போட்டிப் பரீட்சைக்காக ஒதுக்கப்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையைப் பூர்த்தி செய்யக் கூடியவாறு நியமனங்கள் வழங்கப்படும்.

*8.1.2 பாடவிதானம்.-*

| *வினாத்தாளின் பெயர்* | *பாடவிதானம்* |
|---|---|
| 1. பொது விவேகம் | புள்ளிவிபரவியல் ரீதியாக, மொழி ரீதியாக, வடிவக் கட்டமைப் புக்கள் உறவுகளுக்கிடையிலான தொடர்புகள் போன்ற பிரச் சினைகள் மட்டிலான பகுப்பாய்வுத் திறமை தர்க்கரீதியான அறிவு, பொருள்கோடல் திறமை, வேறு நிலைமைகளுக்கு உரித்தாக்கிக்கொள்வதற்கான ஆற்றல் மற்றும் முடிவுகளை எட்டுதல் தொடர்பாக பரீட்சார்த்தியிடம் காணப்படும் அறிவு மட்டத்தினை அளவிடுதல் இங்கு எதிர்ப்பார்க்கப்படுகின்றது. (இவ் வினாத்தாள் பல்தேர்வு வினாக்கள் மற்றும் சுருக்க விடைகளுக்கான வினாக்கள் என்பவற்றைக் கொண்ட 50 வினாக்களை உள்ளடக்கியதாகும் சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.) |
| 2. தகவல், தொடர்பாடல் தொழில்நுட்ப முகாமைத்துவ உளச்சார்பு | அரசாங்க சேவையில் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடையதாக ஏற்படக்கூடிய பிரச்சினைகள் ஒன்றோ அல்லது பலவற்றையோ தொடர்புபடுத்தி கட்டமைக்கப்பட்ட விடயம்/விடயங்களை பரீட்சார்த்திக்கு வழங்கி பரீட்சார்த்தியிடம் காணப்படும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு, படைப்பாற்றல் மிக்க சிந்தனா சக்தி மற்றும் பிரச்சினைகளைத் தீர்க்கும் திறன், தாபன விதிக்கோவை, அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகள் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கு உரித்தான அரசாங்க சேவையின் நடைமுறைகள் சார்ந்த அளவீடுகள் மற்றும் பரீட்சார்த்தியின் உளச்சார்பினை அளவீடு செய்யுமுகமாக இப் பரீட்சை வினாத்தாள் தயாரிக்கப்பட்டுள்ளது. (இவ் வினாத்தாள் சுருக்க விடைகளுக்கான வினாக்கள் மற்றும் கட்டமைக்கப்பட்ட வினாக்கள் என்பவற்றைக் கொண்ட வினாக்களை உள்ளடக்கிய தாகும். சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.) |

*8.2.* நேர்முகப் பரீட்சை .-

*8.2.1 பொது நேர்முகப் பரீட்சை.-*

சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு ஏற்புடையதாக வெளியிடப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளனவா என பரீட்சிப்பதற்காக இந்நேர்முகப் பரீட்சை நடாத்தப்படுகின்றது. புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது

*9.* **பரீட்சை நிபந்தனைகள்.-**

(i) பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் தாம் விரும்புகின்ற ஏதாவதொரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும். அத்துடன் பரீட்சார்த்திகள் இப்பரீட்சையின் சகல வினாத்தாள்களிலும் உள்ள வினாக்களுக்கு ஒரு மொழியிலேயே பதிலளித்தல் வேண்டும். பரீட்சார்த்திகளினால் தத்தமது விண்ணப்பப்படிவங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை மொழி மூலத்தினை மாற்றுவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாது. எல்லா பரீட்சார்த்திகளும் இவ்விரு வினாப்பத்திரங்களுக்கும் தோற்றுதல் வேண்டும்.

(ii) இணையவழியில் (Online) அனுப்பும் பரீட்சை விண்ணப்பங்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் நிரப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பதாரியினால் இணையவழி ஊடாக அனுப்பி வைக்கும் மென் பிரதி மற்றும் பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும் அச்சுப் பிரதி (Print out) ஆகிய இரண்டையும் பரீட்சைத் திணைக்களத்திற்கு கிடைக்கப் பெற்றதன் பின்னர் அம்மென் பிரதி மற்றும் அச்சுப் பிரதி சரிபார்க்கப்படுவதுடன் (Verify), செல்லுபடியாகும் விண்ணப்பமாக திணைக்களத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றதா/ இல்லையா என தொகுதியினுள் பிரவேசிப்பதற்கு பயன்படுத்திய கையடக்கத் தொலைபேசி இலக்கத்துக்கு குறுந்தகவல் (SMS) மூலமோ அல்லது மின்னஞ்சல் (E-mail) முகவரிக்கோ அறிவிக்கப்படும். இணையவழி ஊடான விண்ணப்பத்தை பூரணப்படுத்துவதற்கு முன்னர் பரீட்சைக்காக விண்ணப்பிப்பதற்கு தயாரிக்கப்பட்டுள்ள பொதுவான அறிவுரைப்

படிவம் (Common Instructions) இனை பதிவிறக்கம் செய்தல் வேண்டும். விண்ணப்பத்தை நிரப்பும் போது இவ்வறிவுரைகளை கண்டிப்பாக பின்பற்றல் வேண்டும். விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியினைப் பெற்றதன் பின்னர், அதில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு திருத்தங்களும் செல்லுபடியாகும் திருத்தங்களாக ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பூரணமற்ற விண்ணப்பங்கள் எந்த அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

(iii) **பரீட்சைக் கட்டணம்** ரூபா 1200.00 ஆகும். இப்பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தும் போது இணையவழித் தொகுதியின் ஊடாக வழங்கப்படும் பின்வரும் கட்டணங்களைச் செலுத்தும் முறைமையின் கீழ் மாத்திரம் கொடுப்பனவு இடம்பெறுதல் வேண்டும்.

i. ஏதேனும் வங்கிக் கடன் அட்டை மூலம் ( Any Bank Credit Cards)
ii. ஏதேனும் வங்கி பற்று அட்டை மூலம் (Any Bank Debit Cards)
iii. இலங்கை வங்கி இணையவழி வங்கி முறை ( Bank of Ceylon Online Banking Method)
iv. ஏதேனும் இலங்கை வங்கிக் கிளை மூலம் ( Bank of Ceylon teller Slip Payment)
v. தபால் திணைக்களத்தின் ஏதேனும் தபாலகத்தின் மூலம் (Postal Department Payment at any Post Office)

**குறிப்பு** : மேற்படி முறைகள் மூலம் கொடுப்பனவினை மேற்கொள்ள முடியும் என்பதுடன் அவை தொடர்பான அறிவுரைகள் இணையத்தளத்தின் பரீட்சைக்குரிய தொழிநுட்ப ஆலோசனை என்பதன் கீழ் வெளியிடப்பட்டுள்ளது.

(iv) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டதாக குறுந்தகவல் (SMS) மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அறிவிக்கப்படும். பரீட்சைக்கான முழுத் தொகையையும் செலுத்த வேண்டும் என்பதோடு, பரீட்சைக் கட்டணம் குறைவாகவோ அல்லது கூடுதலாகவோ செலுத்தப்பட்டிருப்பின் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும். மேற்குறிப்பிட்ட கட்டண முறைமையின் மூலம் பரீட்சைக் கட்டணம் செலுத்தும் போது ஏற்படும் கோளாறுகள் தொடர்பில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் பொறுப்புக் கூறமாட்டாது.

(v) பரீட்சைக்காக செலுத்தப்பட்ட தொகை எந்தவொரு காரணத்திற்காகவும் மீளளிக்கப்பட மாட்டாது, அத்துடன் மற்றொரு பரீட்சைக்காக மாற்றப்படவும் மாட்டாது.

(vi) விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரத்திலும் விண்ணப்பதாரியின் கையொப்பம் சான்றுப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**.- பரீட்சை அனுமதி அட்டை இன்றி பரீட்சை மண்டபத்திற்கு நுழைவதற்கு இடமளிக்கப்படமாட்டாது. பரீட்சை ஆரம்பமாகும் திகதியில் பரீட்சை மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பரீட்சார்த்தி ஒருவருக்கு அனுமதி அட்டை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்கு தோற்றுவதற்கு அல்லது பதவிக்கான தகைமையை பூர்த்தி செய்துள்ளார் அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படலாகாது.

(vii) வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்தவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற எடுகோளின் அடிப்படையில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள வயதெல்லை, விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் உரிய பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டு பிழையின்றி இணையவழி மூலம் அனுப்பி வைத்துள்ள விண்ணப்பத்தின் அச்சுப் பிரதியை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை அனுமதிப் பத்திரம் அனுப்பப்படும். பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விநியோகிக்கப்பட்டவுடன் அது பற்றி பத்திரிகை அறிவித்தல் மற்றும் இலங்கை பரீட்சை திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்படும். அவ் அறிவித்தல் வெளியாகி 2 அல்லது 3 நாட்களின் பின்னரும் பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், ஒழுங்கமைப்பு (நிறுவனம் சார் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைக்) கிளையிடம் அறிவிக்க வேண்டும். அவ்வாறு விசாரிக்கும் போது விண்ணப்பதாரியினால் தான் தோற்றவுள்ள பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், மற்றும் முகவரி என்பனவற்றை சரியாக குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பதாரி கொழும்புக்கு வெளிப் பிரதேசம் எனின் அனுமதி அட்டையை அனுப்புவதற்கான தொலைநகல் (பெக்ஸ்) இலக்கத்தைக் கொண்ட உமது கோரிக்கைக் கடிதத்தை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு பெக்ஸ் மூலம் அனுப்புவது மிகவும் பயனுள்ளதாக அமையும். அவ்வாறு விசாரிக்கும் போது பரீட்சை திணைக்களத்தினால் கோரப்படும் ஏதேனும் ஒரு தகவலை உறுதிப்படுத்துவதற்காக தம் வசம் வைத்திருக்கும் விண்ணப்பத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியதன் பின்னர் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டின் பிரதி மற்றும் விண்ணப்பப்படிவத்தின் அச்சிடப்பட்ட பிரதியை தபாலிடும் போது பதிவு செய்த பற்றுச்சீட்டினையும் வைத்திருப்பது பிரயோசனமாகும்.

(viii) அராசங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின்படி, பரீட்சையை காலந் தாழ்த்துவதற்கு அல்லது இரத்துச் செய்யவதற்கான அதிகாரம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(ix) பரீட்சை நடாத்தல் மற்றும் பெறுபேறுகளை வெளியிடல் தொடர்பில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்குக் கட்டுப்பட்டு நடப்பதற்கு பரீட்சார்த்திகள் கடமைப்பட்டுள்ளனர். அவ் ஒழுங்கு விதிகளை மீறுமிடத்து, பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைக்கு உட்படவேண்டி ஏற்படும்.

(x) பரீட்சார்த்திகள் பரீட்சை நிலைய மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(i) தேசிய அடையாள அட்டை ;
(ii) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு ;
(iii) செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

அவ்வாறே பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தும் வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு தனது ஆளடையாளத்தை உறுதிப்படுத்த மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைய அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்திற்கு பிரவேசித்தது முதல் பரீட்சை நிறைவு பெற்று வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

(xi) *பெறுபேறுகளை வெளியிடல்.*- எழுத்துமூல பரீட்சையில் ஒவ்வொரு பாடத்துக்கும் 40% வீதத்திற்கு குறையாமலும் மற்றும் முழுமொத்த பரீட்சையினதும் புள்ளிகளின் எண்ணிக்கையின் 50% அல்லது அதற்கு அதிகமாகவும் புள்ளிகள் பெற்ற பரீட்சார்த்திகளை தேர்ந்தெடுத்து அவர்களின் அப்புள்ளிகளின் மொத்த எண்ணிக்கைக்கு ஏற்ப திறமை அடிப்படையில் நிரப்ப எதிர்பார்க்கப்படும் வெற்றிட எண்ணிக்கைக்கு சமனான பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை உள்ளடங்கும் வகையில் தயாரிக்கப்பட்ட முன்னுரிமை பட்டியல் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்துடன் அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்படும்.

பரீட்சைக்குத் தோற்றிய சகல பரீட்சார்த்திகளுக்கும் பெறுபேறுகள் தனிப்பட்ட ரீதியாக அனுப்புவதும், www.results.exams.gov.lk எனும் இணையத்தளத்தில் வெளியிடுவதும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும்.

10. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ் அறிவித்தலில் மொழி ரீதியான பதங்களுக்கிடையில் ஏதேனும் பொருத்தமற்ற தன்மை அல்லது இணக்கமின்மைகள் இருப்பதாக கண்டால், அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி அறிவித்தலின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

ஜே.ஜே. ரத்னசிரி,
செயலாளர்,
அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும்
உள்ளூராட்சி அமைச்சு,

2020, செத்தெம்பர் 14

**விசேட கவனத்திற்கு :**

இப் பரீட்சைக்கு இணையவழி (Online) முறை மூலம் விண்ணப்பங்கள் கோரப்படுவதால் 2020.09.25 ஆந் திகதியின் பின்னரே விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதை கவனத்தில் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

09-774

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.